



# கலைஞர் மேல் காதல் கொண்டேன்

தமிழ்க்குடிமகன்

# கலைஞர் மேல் காதல் கொண்டேன்

(பகுதி ஒன்று)

முனைவர்

மு. தமிழ்க்குடிமகன், எம்.ஏ., பிஎச்.டி.,
(முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர்)

வெளியீடு:

அறிவொளி பதிப்பகம்

7-அ, கல்வி வாரு தெரு,
மயிலை - சென்னை - 4.

முதற்பதிப்பு : 31.10.1992

உரிமை : த.வெற்றிச்செல்வி

| |
|---|
| நூல் உருவாக்கம் : வா.மு.சே.திருவள்ளுவர் |

விலை : உருபா 12.00

அச்சும் அமைப்பும்:

சேதுமதி அச்சகம்,
சென்னை - 600 111.
☎ 423375

## கழகப் பொதுச் செயலாளர்
## இனமானப் பேராசிரியர் அவர்கள்
# அணிந்துரை

தமிழும் தமிழினமும் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து தரணி போற்ற வாழவேண்டும்; அதற்கான வழிகாண வேண்டும் என்பதில் தளராத ஆர்வத்துடன், தமது பேச்சாலும், எழுத்தாலும் பணியாற்றி வருபவர் எனது அன்புக்குரிய **முனைவர் மு. தமிழ்க்குடிமகன்** அவர்கள்.

அவர் **'கலைஞர் மேல் காதல் கொண்டேன்'** என்பது எனக்கு வியப்பே! தமிழுள்ளம் எவரை ஏற்கும்? எதற்காகப் பிறரைப் போற்றும்? என்றுதான் கேட்கத் தோன்றும்.

ஆயினும் கலைஞரை ஒரு தலைவராக, அரசியல் வழிகாட்டியாக மட்டும் மனம் கொள்ளாமல், தமிழ் மூச்சாக உணர்வாக தமிழ்மரபாக - மானமாக ஏன், இனம்காக்கும் மறவனாதலின் இனவடிவமாகவே கருதும், மதிக்கும் தமிழ்க்குடிமகன், கலைஞர்மேல் கொண்ட காதல் என்பது தமிழ் மீதும் இனத்தின் மீதும் கொண்ட காதலே என்பேன்.

இந்த ஏட்டில் இடம் பெற்றுள்ள எழுத்துக்களில் கலைஞரின் கவிதையும் உண்டு; அவரது கவிதைத் திறன்

ஆய்வும், இடம் பார்த்து அமர்ந்து கொள்ளும் சொல்லும் அதன் கருத்து நயமும் போற்றப்படுவதும் உண்டு. தமிழ்க்குடிமகன் பாடிய புதுக்கவிதையும் உண்டு, ஆற்றிய உணர்ச்சிதரும் உரையும் உண்டு.

கலைஞரிடத்தில் அவர் கொண்ட உறவு, தொடர்பு கலைஞரிடம் பெற்ற பாராட்டு முதலானவை சுவை பயப் பன. இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்ட நோக்கம் பற்றிய அவரது விளக்கம் உணர்ச்சியூட்டும். கலைஞர் காட்டும் **'சமத்துவத்துக்குச் சரியான வழியும்'**, அவர் விவரிக்கும் **'அந்தமானைப் பாருங்கள்'** நூல் வெளியீட்டு உரையும் சிறப்பளிப்பன.

தமிழ்க்குடிமகன் என்னும் முனைவர் பெயரையும், தமிழ்க்குடிமகன் எனலாகும் தமிழ் மக்களையும் இணைத்துக் காட்டித் தமிழ் மக்களின் நிலையுணர்த்தும் கலைஞரின் சொல்லோவியம் இடம் பெறுகின்றது.

தமிழ் இனத்தின் வாழ்வில் புகுந்துகொண்ட வேற்றினத் தின் தாக்குறவால் பிழைபட்ட தமிழரின் தலையெழுத்தை மாற்றியமைக்கும் கடமை ஏற்ற கலைஞர், அச்சிட்ட தமிழ் ஏட்டின் எழுத்திடையே புகுந்துகொள்ளும் பிழையையும் நுண்ணிய நோக்குடன் சுட்டிக்காட்டும் திறனையும் இந்த ஏட்டில் காணலாம்.

சட்டப் பேரவையின் தலைவராகத் தமிழ்க்குடிமகன் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில், அவருக்குக் கலைஞர் தெரி வித்த வாழ்த்துரை வரவேற்புரை - அவருக்குச் சூட்டப் பட்ட மணிமுடி எனலாம்.

கலைஞரின் தனித்தன்மையை ஆற்றல் மலர்ச்சியை, அறிவின் வளப்பத்தை, கலை உணர்வின் புலப்பாட்டைக் குறிப்பிடுகையில்,

*"ஒரே செடியில் இத்தனை வண்ணப் பூக்களா?*

*ஒரு மனிதனிடத்தில் இத்தனை வகையான ஆற்றல்களா?*

*அந்த ஆற்றல்களிலும் இத்தனைத் தனித் தன்மைகளா?*

என்று வியந்து போகிறார் தமிழ்க்குடிமகன். அதனால் கூறுகிறார்,

**தீயவை பெருத்து நிற்க**
**திருடர்கள் கொழுத்து நிற்க,**
**நோயினை உணரா வண்ணம்**
**நோஞ்சானாய்த் தமிழன்சாக**
**தாயவள் அடையும் துன்பம்**
**தடுத்திட முடியா வண்ணம்**
**போய்விடக் கூடா தென்றால்**
**போற்றுவோம் கலைஞர் தன்மை!**

அப்படிப்பட்ட உணர்வு தழைக்கும் இந்த ஏட்டினை வழங்கிய முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்கட்கு எனது வாழ்த்துக்கள்!

**அன்பன்,**

**க.அன்பழகன்**

# ஆக்கியோன் உரை

**'கலைஞர் மேல் காதல் கொண்டேன்!'** என்பது நூல் தலைப்பு. ஆம்! தலைவரது தலைமைக்குக் கட்டுப்பட்ட தொண்டனாயினும் அவரது எழுத்தை எண்ணிப்படித்து நெஞ்சில் வைத்து மேடை தோறும் நயம்பட எடுத்துரைத்து, அவரது கலையைச் சுவைத்து வரும் எனக்கு அவரது எழுத்தில், பேச்சில், தலைமையில், பன்முக ஆற்றலில் ஒரு மயக்கம்! அதையே காதல் ஆக்கிக் கொண்டேன். மேலும் தலைவர் அவர்கள் என்மீது வைத்த அன்பும், நம்பிக்கையும் அவரது எழுத்திலும், பேச்சிலும் எப்படிப் புலப்படுத்தப்படு கின்றன என்பதையும் உலகத்துக்கு நான் உரைத்தாக வேண் டுமே! எனவே இரண்டும் கலந்த கவிதை, கட்டுரை, உரை, விளக்கம் ஆகியவற்றைக் கால நிரல்படி (chronological order) தந்துள்ளேன். உறவும் நெருக்கமும் எப்படி வளர்கின்றன என்பதை விளக்க இந்த அமைப்புத் தேவை!

குடத்தில் இருந்த என்னைக் கோட்டை வரைக்கும் கொணர்ந்து கோடித் தமிழர்களிடமும் அடையாளம் காட்டிய அண்ணல் நாற்பது காணி நிலமே ஆட்சி எல்லையாகக் கொண்ட என்னைச் சட்டமன்றத்தின் ஆட்சி வரைக்கும் உயர்த்திய கோமான் தலைவர் கலைஞர். அவரது சிறப்புகள் மேடையில் எடுத்துச் சொல்லப்படும்போது, இவற்றைத் தொகுத்து நூலாகத் தந்தால் பயன் விளையுமே என்று பலரும் கூறினர். விளைவு இந்த நூல்.

மேலும் என்னைக் கழகப் பேச்சாளனாக மட்டுமே தெரிந்து வைத்திருக்கும் தோழர்கள் எழுத்தாளனாகவும் பார்க்கவேண்டும் என்று நினைத்தேன். தலைவர் என்னைப் பாராட்டிப் பேசியவற்றை வரிமாறாமல் தந்துள்ளேன். இவை தற்புகழ்ச்சி பாட அல்ல. தலைவர் புகழ்ந்த வரிக ளைப் போற்றிப் பேணும் பாங்கு தொடர வேண்டும் என்ப

தற்காக. 'முன்னோர் மொழிதனைப் பொன்னேபோல் போற்றும்' தமிழகத்தில் அண்ணன் மொழிகளைக் கன்னலெனப் போற்றும் கடமை எனக்குண்டல்லவா?

8.2.89-இல் எனக்கு அளிக்கப்பட்ட பதவி உயர்வு - திடீர் உயர்வன்று - திட்டமிட்ட உயர்வு படிப்படியான உயர்வு - தலைவர் கலைஞர் அவர்களின் பாசமிக்க பரிவு என்பதை இந்தத் தொகுப்பு உறுதியாக வெளிப்படுத்தும்.

இந்த நூலுக்குப் பேராசிரியர் அவர்களைத் தவிர வேறு யார் அணிந்துரை எழுத முடியும்? தலைவரின் தோழர், இந்தத் தம்பிக்கு மானசீகமான ஆசான் நம் பேராசிரியர். நம் பேராசிரியர் 1957-இல் வெளிவந்திரா விட்டால் பச்சையப்பனில் நான் அவருடைய மாணவன்தானே! ஆனாலும் இன்றும் அந்த உணர்வோடுதான் நூற்படியைத் தந்து அணிந்துரை எழுத வேண்டினேன். 27.10.92 மாலையில்தான் கொடுத்தேன். என்ன வியப்பு? 28.10.92 மாலையில் அம்பத்தூரில் நடைபெற்ற படத்திறப்பு விழாவின் போது அவரே எடுத்துக் கொண்டு வந்து கொடுத்துவிட்டார். ஒரே நாளில் அணிந்துரையா? அதுவும் நூலை ஊன்றிப்படித்து (பல இடங்களில் அவர் கைப்படவே பிழைகளைத் திருத்தியுள்ளார்) தட்டச்சுச் செய்து தம்பி கையில் கொடுத்த அந்தப் பெருந்தன்மையை எண்ணிப் போற்றுகிறேன். முனைவர் பட்டம் பெற்றதைப் பாராட்டும் விழாவில் நான் கல்லூரியில் இருந்தபோது அருப்புக்கோட்டையில் என்னை **'ஓர் இளைய திரு.வி.க.'** என்று பாராட்டினார் நம் பேராசிரியர். அவர் மொழிக்கு இலக்காக நான் வளர முயல்கிறேன்.

எனவே பன்முக ஆற்றலும் பீடுறு தலைமைத் திறமும் கொண்ட தலைவர் கலைஞர், தெளிந்த நீரோடையாக அழுத்தமாக நின்று துணை புரியும் பேராசிரியர் ஆகியோரை நம்பித்தானே தமிழ்க்குடிமகனும் வாழவேண்டும்! தமிழ்க் குடி மக்களும் வாழவேண்டும்!

அந்த நம்பிக்கை நாளும் நாளும் வளர இந்த நூலும் துணையிருக்கும் என்ற நம்பிக்கையோடு இருவரையும் வணங்கி மகிழ்கின்றேன்.

அழகுற அச்சிட்டு, ஆர்வமுடன் தானே முன்வந்து இந்த நூலை என் கையில் உருவாக்கிக் கொடுத்த வா.மு.சே. திருவள்ளுவருக்கும் என் நன்றி உரியது.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தமிழ்க்குடிமகன் - தலைவர் உரை | 5.8.1979 |
| 2. | 'குறளும் பொருளும்' - வெளியீட்டுவிழா | 10.6.1982 |
| 3. | நாளைய வரலாறு நமக்காக! - வரவேற்புக்கவிதை | 23.6.1982 |
| 4. | பாண்டித்துரைத்தேவர் - படத்திறப்பு | 31.7.1983 |
| 5. | கலைஞரின் கவிதைகள் | 3.6.1984 |
| 6. | சமத்துவத்துக்குச் சரியான வழி | 11.5.1984 |
| 7. | 'குறளோவியம்' - வெளியீட்டு விழா உரை | 17.2.1985 |
| 8. | மனமுவந்து வரவேற்கிறோம்! | 10.4.1986 |
| 9. | குறளோவியம் இரண்டாம் பதிப்பு வெளியீடு | சூலை 1986 |
| 10. | அந்தமானைப் பாருங்கள்! அணிந்துரை | 5.12.1986 |
| 11. | ஏன் இந்த எதிர்ப்பு? | 14.1.1987 |
| 12. | 'அந்தமானைப் பாருங்கள்' - நூல் வெளியீட்டுரை | 20.2.1987 |
| 13. | போற்றுவோம் கலைஞர் பண்பை! | 25.12.1987 |
| 14. | கலைஞர்க்கா தாழ்வு மனப்பான்மை? | 5.11.1988 |
| 15. | சட்டப்பேரவையில் பாராட்டு | 8.2.1989 |

# தமிழ்க்குடிமகன்

*(5.8.1979 என் வாழ்வின் பொன்னான நாள். தலைவர் கலைஞர் அவர்கள் 1969, 1972, 1974 ஆகிய ஆண்டுகளில் முதலமைச்சராக எம் கல்லூரிக்கு வந்துள்ளார். அப்போதெல்லாம் யாதவர் கல்லூரி ஆசிரியர்கள் சார்பில் மாலை அணிவித்ததோடு சரி. நேருக்கு நேர் பேசவும் இல்லை. அறிமுகப்படுத்திக் கொள்ளவும் இல்லை. 1977-இல் தலைவர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராகி விட்டார். 1979-இல் நான் யாதவர் கல்லூரி முதல்வரானேன். இந்த நிலையில் கல்லூரிப் பேரவை மற்றும் அனைத்து மன்றங்களின் தொடக்கவிழாவிற்குத் தலைவர் கலைஞர் அவர்களை அழைத்திருந்தோம். 5.8.79-இல் அந்த விழா நடைபெற்றபோது முதல்வர் எனும் முறையில் அவர் அருகில் நின்று ஒரு வரவேற்புரை நல்கினேன். வாழ்நாளில் அவரை நேருக்கு நேர் சந்திக்கும் முதல் வாய்ப்பு அது. வரவேற்புரை கேட்டு மகிழ்ந்துபோன கலைஞர் தான் பேசுகிறபோது **'தமிழ்க்குடிமகன்'** எனும் தலைப்பினை அங்கேயே தேர்ந்தெடுத்து உரையாற்றினார். ஆம்! முதல் சந்திப்பிலேயே **'தமிழ்க்குடிமகன்'** தலைப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். அந்த உரையைத் தான் இப்போது படிக்கிறீர்கள்.)*

இந்தக் கல்லூரியின் அனைத்து மன்றங்களின் தொடக்க விழா என்ற பெயரில் இந்த மாலை நிகழ்ச்சியில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

பத்தாண்டுகளுக்கு முன்பு இந்தப் பரந்த வெளியில் இந்தக் கல்லூரி துவங்க வேண்டும் என்கின்ற தணியாத ஆசையோடு கல்நாட்டு விழா நடத்திவிட்டு அதன் பின் இங்கே எழுந்துள்ள கட்டிடங்களைக் காணும் வாய்ப்பினைப் பெறும் அளவிற்கு இந்தக் கல்லூரி சிறப்புற நடைபெறுகிறது என்ற செய்தியினை, தொடர்ந்து கேட்டு, நேரிலே காண வேண்டும் என்கிற ஆசையும் நிறைவு பெறுகின்ற அளவிற்கு இந்த விழாவிலே நான் பங்கு பெறுகின்ற வாய்ப்பை அடைந்திருக்கின்றேன்.

அனைத்து மன்றங்களின் தொடக்க விழாவில் மாணவர் பேரவைத் தலைவருக்கான உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியும் இங்கே நடைபெற்றிருக்கிறது.

இன்றைக்கு மாணவர் தலைவர் எடுத்துக் கொண்டிருக்கிற உறுதிமொழி அந்தப் பதவி எத்தனை ஆண்டு காலத்திற்கு, எத்துணை மாதங்களுக்கு என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றதோ அந்தக் கால கட்டம் வரையில் அவர் இந்தப் பொறுப்பை ஏற்றுப் பணியாற்றுவார் என்ற உறுதியை நமக்குத் தெரிவிக்கின்றது.

ஆனால் இன்றைக்கு அனைத்திந்திய அரங்கத்தில் நாள் தோறும் உறுதிமொழிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன - முதல்வர் முன்னிலையில் அல்ல. இந்தியக் குடியரசுத் தலைவர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. எடுக்கப்பட்டவர்கள் எவ்வளவு நாளுக்கு உறுதிப்பாட்டோடு இருப்பார்கள் என்ற ஐயப்பாட்டோடு அனைத்து இந்தியாவில் இருக்கின்ற மக்கள் விழிகளை அகல விரித்து இந்திய

நகரத்தின் தலைநகரை உற்று நோக்கியவாறு இருக்கின்ற சூழ்நிலையில் தான் நான் உங்களை இந்தக் கல்லூரியில் சந்திக்கின்றேன்.

நம்முடைய கல்லூரி முதல்வர் தமிழ்க்குடிமகன் அவர்கள் என்னைப் பற்றியும், நான் இந்தக் கல்லூரிக்கு ஆற்றிய பணிகள் பற்றியும் எடுத்துரைத்ததைத் தொடர்ந்து மாணவர் பேரவைத் தலைவர் ராஜசேகரனும், ஆட்சிக் குழுத்தலைவர் கோவிந்தராசனும், தாளாளர் ரங்கசாமியும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

மாணவர் பேரவைத் தலைவர் உரையாற்றியபோது யாதவப் பெருங்குடி மக்களின் தலைவர் கண்ணனென்றும், அந்தக் கண்ணன் ஏழ்மையிலே துவண்டு கொண்டிருந்த குசேலனுக்குச் செல்வத்தை வாரி வழங்கி மாளிகைக்கு அதிபதியாக ஆக்கினான் என்றும் ஒரு உதாரணத்தை எடுத்துச் சொன்னார். குசேலருக்கு 27 குழந்தைகள். குசேலருக்கு அளப்பரிய செல்வத்தையும் அளித்த கண்ணன் குசேலருக்கு எந்த நிபந்தனையும் போடவில்லை. நீ பணக்காரனாகிவிட்ட காரணத்தினால் உன் பிள்ளைகள் 27 பேருக்கும் படிப்பதற்கான வாய்ப்புகள் கிடையாது என்று அவன் தடுத்துவிடவில்லை. அப்படித் தடுத்திருந்தால் குசேலருக்கு இவ்வளவு செல்வம் மிகுந்தவராக ஆகிவிட்டார் - ஆகவே அவருடைய பிள்ளைகள் படிக்க இயலாது - அவர்கள் எல்லாம் முன்னேறியவர்களாக மாறிவிட்டார்கள் என்று கண்ணன் அன்றைக்குச் சொல்லி இருந்தால், குசேலர் பிள்ளைகள் 27 பேரும் கல்வி கற்றிருக்க முடியாது. இன்று அதே நிலை தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. குசேலரின் நிலையிலிருந்த பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு கண்ணன் அல்ல என்னுடைய அண்ணன், அவருடைய தலைவர் தந்தை பெரியார், அவருக்கும் முன்பிருந்த திராவிடர் இயக்கத்தின் பெருந்தலைவர்கள் இவர்களெல்லாம் வழங்கிய கருவூலந்தான், நிகரற்ற செல்

வம்தான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், வகுப்புரிமை என்பதாகும்.

அதை வழங்கிய அந்தத் தலைவர்கள் எந்த நிபந்தனை யையும், எப்படி கதையிலே வருகிற கண்ணன் குசேலருக்கு விதிக்கவில்லையோ, அதைப்போல நிபந்தனைகள் எதுவு மில்லாமல் தாழ்ந்து கிடக்கும் சமுதாயம் தலைமுறை தலை முறையாகக் கல்வியறிவற்று, ஏன், கண்ணற்று, கபோதி நிலையிலிருக்கிற சமுதாயம் தலை நிமிர்ந்து எழுந்து நடமாடவேண்டும் என்கிற ஒரே எண்ணத்தோடு அந்தக் கருவூலத்தை வழங்கினார்கள்.

அந்தச் செல்வம் தொடர்ந்து பல ஆட்சியாளர்களால் பாதுகாக்கப்பட்டது. பறிபோகாமல் அதைப் பாதுகாக்கப் பல ஆட்சிகள் இருந்தன. பெருந்தலைவர் காமராசர், பெரிய வர் பக்தவத்சலம், குமாரசாமிராஜா, குலக்கல்வித் திட்டம் கொண்டு வந்த ராஜாஜி அவர்களே ஆனாலும்கூட அந்தச் செல்வத்தைச் சீரழிக்க எண்ணியது இல்லை. ஆனால் இன் றைக்கு அந்தச் செல்வம் கொள்ளை போகின்ற சூழ்நிலையி லேதான் உங்கள் முன்னால், அந்தக் கொள்ளையைத் தடுக்க உங்களுடைய கரங்களும் எனக்கு உதவிட வேண்டும் என்ற கோரிக்கையோடு நான் இங்கே பேசிக் கொண்டிருக்கிறேன்.

தமிழ்க்குடிமகன் இங்கே நான் நீண்ட நேரம் உரையாற்ற வேண்டுமெனக் குறிப்பிட்டார். எனக்கு நிறைய நிகழ்ச்சிகள் இருப்பது உங்களுக்குத் தெரியும். நீண்ட உரைக்குத் தலைப்பு எதுவாக இருக்காலம் என்று மேடையில் இருந்தவாறு நான் யோசித்தேன். தலைப்பு **"தமிழ்க்குடிமகன்"** என்பதுதான். தமிழ்க்குடிமகன் பழங்காலத்தில் குறிஞ்சி, முல்லை, மரு தம், நெய்தல், பாலை என்று ஐவகை நிலங்களைப் பிரித்துக் கொண்டு அந்த நிலங்களுக்கு ஏற்றவாறு வாழ்க்கையை அமைத்துக் கொண்டு வாழ்வு நெறியை உருவாக்கிக் கொண்டு வாழ்ந்தவன். அந்தத் தமிழ்க்குடிமகன் உலகத்திற்

குப்பண்பாடுகளைக் கற்றுத் தரும் ஆற்றல் பெற்றிருந்தான். உலகத்தோடு வாணிபத் தொடர்பு கொள்ளுமளவிற்குத் திறன் படைத்தவனாக இருந்தான். அந்தத் தமிழ்க்குடிமகன் தமிழகத்தில் விளைவித்த செல்வங்களை கிரேக்கம், யவனம் போன்ற வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்து வெளிநாட்டிலே இருந்து வருகிற பொருட்களைத் தன்னுடைய நாட்டுத் துறைமுகத்தில் இறக்குமதி செய்து அவைகளைத் தமிழ் மக்களுக்குத் தருகிற வாணிப வேந்தனாக விளங்கினான்.

கடாரங்கொண்டான், இலங்கையை வென்றான், வரலாற்று வேந்தனாகவும் தமிழ்க்குடிமகன் திகழ்ந்தான். அப்படித் திகழ்ந்த தமிழ்க்குடிமகன் இடைக்காலத்திலேற்பட்ட சில அல்லல்களால், சோதனைகளால், சில குறுக்கீடுகளால் தமிழ்க்குடிமகன் என்ற பெயரையே இழந்தான். அந்தப் பெயர் யாதவர், முக்குலத்தோர், வன்னியர், முதலியார், செட்டியார், பிள்ளை என்று இப்படிப் பல பெயர்களாக மாறின. பல பெயர்களாக மாறினாலும் அவன் தமிழ்க்குடிமகன்தான். எப்படிக் கண்ணனை கிருஷ்ணனென்றும், பரமாத்மா என்றும், பரந்தாமன் என்றும், வேணுகோபாலன் என்றும், விஷ்ணுவென்றும் யாதவர்களும், வைணவர்களும் பல பெயரிட்டு அழைக்கிறார்களோ அதைப்போலத்தான் தமிழ்க்குடிமகனைப் பல பெயரிட்டு அழைக்கிற நிலைமை தமிழகத்திலே ஏற்பட்டது.

அந்த நிலைக்குக் காரணம் தமிழ்க்குடிமகன் அகராதியிலேயே இல்லாத வார்த்தை - ஜாதி என்ற வார்த்தை - புதிதாக நுழைக்கப்பட்டமைதான். அப்படி நுழைக்கப்பட்டதன் காரணமாகத் தமிழ்க்குடிமகன் பல பிரிவுகளாக ஆக்கப்பட்டான். அப்படிப் பிரிக்கப்பட்டதற்குப் பல்வேறு காரணங்கள் சொல்லப்பட்டன. அதற்கு ஆண்டவன் சாட்சிக்கு இழுக்கப்பட்டான்! வேதங்கள், சாத்திரங்கள், சம்பிரதாயங்கள் இவைகள் தான் இந்தச் சமூக நீதிக்குக் காரணம் என்று சமூகத்தில்

அநீதியைப் புரிந்தவர்கள் அவைகளைத் தங்களுக்கு எடுத்துக் காட்டுக்களாகச் சொன்னார்கள்.

இவன் பிரம்மதேவனின் தலையிலே உதித்தான், அவன் தோளில் உதித்தான், இவன் தொடையில் பிறந்தான், இவன் காலில் உதித்தான், காலில் பிறந்த காரணத்தால் கீழ்சாதிக்கா ரன் இவன் என்று சொன்னார்கள். ஆண்டவனையே சாட் சிக்கு இழுத்துத் தமிழ்க்குடிமகனைத் தாழ்த்தி விட்டார்கள். இப்பொழுதுதான் தன்மான இயக்கம் இந்த மண்ணிலே தோன்றியது. இப்படிச் சாதியின் பெயரால், மதத்தின் பெய ரால், வேதங்களின் பெயரால், இதிகாசங்களின் பெயரால் மக்களைத் தாழ்த்தியிருக்கின்ற நிலை, பிற்படுத்தியிருக்கின்ற நிலை, சரியா? தகுமா? முறையா? என்று தன்மான இயக்கம் கேட்டது.

அந்தத் தன்மான இயக்கத்தின் மொத்த வடிவமாகத்தான் தந்தை பெரியார் குரல் எழுப்பினார். அந்தக் குரலுக்குக் கிடைத்த பதில்தான் இவர்கள் ஆண்டவன் பிறப்பிலேயே தாழ்ந்தவர்கள், கீழ்சாதிக்காரர்கள் என்று சொன்னார்கள். அதற்குத் தன்மான இயக்கத்தின் சார்பில் நாம் அளித்த பதில் தான் ஆண்டவன் என்று ஒருவன் இருந்து அவன் தன் நெற்றியிலும், தோளிலும், தொடையிலும், காலிலும் மக் களை பிரசவித்திருப்பானானால் அப்படி உற்பத்தி செய்யப் பட்ட அனைவரும் அவரது உடலிலே பிறந்த மனிதர்கள் தானே - அவர்களை ஏன் இத்தனை பிரிவுகளாகப் பிரிக்கிறீர் கள்? என்று கேட்டது மாத்திரமல்ல, இன்னொன்றையும் கேட்டோம்.

அத்திமரத்தை எடுத்துக் கொண்டால் உச்சியிலும், கிளை யிலும், அடிமரத்திலும் காய்கள் காய்க்கின்றன. எங்கே காய்த்தாலும் அதனை அத்திக்காய் என்றுதான் சொல்கி றோமே தவிர, அடிமரத்தில் காய்ப்பதைப் பரங்கிக்காய் என்றோ, உச்சியில் காய்ப்பதை வெண்டைக்காய் என்றோ

அழைப்பதில்லை. அதைப் போலத்தான் பிரம்மாவின் நெற்றியில் பிறந்தவரும், தோளிலும், தொடையிலும், காலிலும் தோன்றியவரும் மனிதர்கள் தானே தவிர அவர்களில் உயர்வு தாழ்வு எதுவும் இல்லை என்று சொன்னோம். அதற்கு இதுவரை பதில் இல்லை. ஆனால் சாதிகள் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் பெருகின.

சாதி பெருகிடப் பெருகிட, அதனை மூலதனமாக வைத்து ஆதிக்கவர்க்கம் தன்னை வலுப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை உருவாக்கிக் கொண்டது! சாதிகள் ஒழிக்கப்பட வேண்டும் என்ற முழக்கம் தமிழகத்தில், தன்மான இயக்கத்தின் சார்பில் எழுப்பப்பட்ட அதே நேரத்தில் இந்திய உபகண்டத்தில் உத்தமர் காந்தியடிகளின் உதடுகளிலே இருந்து அவரின் உள்ளத்து முழக்கம் வெளிப்பட்டது. பல்வேறு அரசியல் இயக்கங்கள் சாதிகள் ஒழியவேண்டும் என்பதிலே முனைப்பைக் காட்டின. அதிலே தலைசிறந்ததாக எல்லோருக்கும் வழிகாட்டத் தக்கதாக இருந்த இயக்கம் திராவிடர் இயக்கம். சாதி ஒழிப்பு இயக்கங்களுக்கு எல்லாம் தலைமை தாங்கியது தன்மான இயக்கம்தான். தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும்தான் என்பதை வரலாறு படித்தவர்கள் மறந்துவிட மாட்டார்கள்.

சாதியை ஒழிப்பதற்கு "சாதி ஒழிக ஒழிக" என்று சொல்லிக் கொண்டிருந்தால் போதுமா என்றால் போதாது. எல்லாச் சாதியைச் சேர்ந்த மக்களும் தங்களை ஒருவரோடு ஒருவர் உடன்பிறப்புகளாகக் கொண்டு பழகிட வேண்டும். தீண்டாமையை ஒழித்திட வேண்டும்.

பெரிய சாதிக்காரர்கள் வாழ்கின்ற பகுதிகளில் தாழ்த்தப்பட்ட சாதிக்காரர்கள் என்று அழைக்கப்படுகிறவர்கள் தோளிலே துண்டுகூடப் போட்டுக் கொள்ளாத நிலை மாறப்பட வேண்டும்; காலிலே செருப்புப் போடுவதற்கும் தடை என்றிருந்த நிலை மாறவேண்டும்; என்றெல்லாம்

போராடிப் போராடிப் பெற்ற வெற்றியின் அடையாளமாகத் தான் இன்றைக்கு இந்தக் கல்லூரி முதல்வர் பேசும்போது குறிப்பிட்டாரே யாதவர் கல்லூரி என்ற பெயரில் இது அமைந்திருந்தாலும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பெரும்பாலான மாணவர்கள் இந்தக் கல்லூரியில் படிக்கிறார்கள் என்று சொன்னாரே அந்தப் பாகுபாடு இருக் கின்ற நிலையாகும்.

சாதிகள் ஒழிக்கப்பட நம்மிடத்திலே நல்ல உணர்வுகள் வெளிப்பட வேண்டும். ஒரு சாதி இன்னொரு சாதியோடு உறவு கொண்டிட வேண்டும் என்கிற நல்ல வழியை அறிஞர் கள் அனைவரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நடைமு றைப் படுத்தினார்கள். இப்படிச் சாதிகள் ஒன்றோடொன்று இணைந்து 'ஒன்றே குலம்' என்ற நிலை ஏற்பட்டாக வேண் டும். அதுவே நம்முடைய குறிக்கோள்.

ஒன்றே குலம் வேண்டும், அதுவே எங்கள் குறிக்கோள் என்று கூறுகிறாயே, அப்படிக் கூறும் நீ வகுப்புரிமை வேண்டும் என்று கேட்பதிலிருந்து வகுப்புகள் இருந்திட வேண்டுமென்று கூறுகிறாயா என்று நீங்கள் கேட்டிடக்கூ டும். இங்கேதான் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

ஒன்றே குலம் என்பதே நம்முடைய குறிக்கோள். அந்தக் குறிக்கோளை அடைகிறவரை இருக்கிற வகுப்புகளுக்குரிய உரிமைகள் குறைக்கப்படக் கூடாது இதுதான் நம்முடைய குறிக்கோள்.

தந்தை பெரியார் அவர்கள் கோயில்களே கூடாது என்ற குறிக்கோள் கொண்டவர். அந்தக் குறிக்கோளுடைய தந்தை பெரியார் கோயிலிலே அர்ச்சனை செய்கிறவர்கள் எல்லாச் சாதிகளையும் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும். அய்யராக வும் இருக்கலாம், அரிசன சமூகத்தைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம். அதற்கோர் சட்டம் தேவை என்று நாம் ஆட்சியி

விருந்தபோது குரல் கொடுத்தார். அந்தக் குரலை நாங்கள் சட்டமாக ஆக்கினோம். ஆனால் உச்ச நீதிமன்றத்தில் சில சனாதனிகள் தொடுத்த போரின் காரணமாகத்தான் நாங்கள் உருவாக்கிய சட்டம் முடமாக்கப்பட்டு இன்னும் எழுந்து நடமாட முடியாமல் இருக்கின்றது. அரசியல் சட்டத்திற்கு எத்தனையோ திருத்தங்கள். ஆனால் இந்தச் சட்டம் நிறை வேற திருத்தம் கொண்டு வரப்படவில்லை. திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்று குரல் கொடுத்த தந்தை பெரியார் மறைந்து விட்டார்.

அவர் மறைந்த நேரத்தில் சொன்னேன் அனைத்து சாதி மக்களும் ஆலயங்களிலே அர்ச்சகர்களாக ஆக வேண்டும் என்று போர்க் கொடி உயர்த்தினார் பெரியார். அதற்கென இயற்றப்பட்ட சட்டம் உச்ச நீதிமன்றத்தில் முடமாக்கப் பட்டு விட்டது. ஆகவே தந்தை பெரியார் இதயத்தில் குத்தப்பட்டிருக்கிற முள்ளை எடுக்காமலேயே அவரைப் புதைக்கிறோம் என்று வேதனையோடு நான் குறிப்பிட்டேன். அந்த முள் வேறு எதுவும் அல்ல. '**ஆண்டவனைப் பூஜிக்கிற அத்தனை பேரும் அர்ச்சனை செய்யும் உரிமை படைத்தவர்க ளாக இருக்கவேண்டும். யார் யார் அர்ச்சனை செய்யும் தகுதி யைப் பெற்று விடுகிறார்களோ, பயிற்சியின் மூலம் தேர்ச்சி யைப் பெறுகிறார்களோ அவர்கள் அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் - கள்ளராக, மறவராக, யாதவ ராக இருந்தாலும், அவர்கள் அர்ச்சகர்களாக ஆகலாம்** என்று பெரியார் கூறினார் என்றால், அதற்கு என்ன பொருள்? கோயில் வேண்டும் என்று அர்த்தம் அல்ல.

'கோயில் கூடாது என்பது குறிக்கோளாக இருந்தாலும், கோயில் என்பது இருக்கும் வரை அங்கே அர்ச்சனை செய்கிற உரிமை அனைவருக்கும் இருக்கவேண்டும்' என்பதுதான் அவருடைய உரிமை முழக்கம். இப்படிக் கொள்கைக்கும் உரிமைக்கும் வித்தியாசம் தெரியாத சில பேர் தங்களையும்

குழப்பிக் கொண்டு, மக்களையும் குழப்பிக் கொண்டிருக்கி றார்கள். கொள்கை என்பது வேறு. அந்தக் கொள்கையை நிறைவேற்ற நடத்துகின்ற பயணத்திலே நமக்கென்று உரிமை கள் இருக்கவேண்டும்.

ஒன்றே குலம் என்பது நம்முடைய குறிக்கோள். நாம் உயிரோடு இருக்கிறோமோ இல்லையோ இன்னும் இரண்டு மூன்று தலைமுறைகளுக்குப் பிறகு, ஐம்பது நூறாண்டுகளுக்குப் பிறகு யாதவர், முதலியார், பிள்ளை என்று சாதிப் பெயர்களே இல்லாத நிலை ஏற்படக்கூடும். அப்படி ஏற்படுகிற வரையில் இருக்கின்ற உரிமைகளை நாம் இழந்துவிடக் கூடாது.

அதற்காகத்தான் இன்றைக்குப் பிற்படுத்தப்பட்ட சமுதா யத்தைச் சேர்ந்த தலைவர்கள் எல்லாம், இந்தச் சமுதாயத்தின் உரிமைகள் பறிக்கப்படுகின்ற போது பதறுகிறார்கள். பதைக் கிறார்கள். பரபரப்பு அடைகிறார்கள். துடிக்கிறார்கள். துவண்டு போகிறார்கள். இந்த நிலை மாற வேண்டுமா? வேண்டாமா என்பதை எதிர்காலத்தை உருவாக்க இருக்கின்ற மாணவக் கண்மணிகள் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

இந்தக் கல்லூரியில் 87 விழுக்காட்டுக்கு மேலானவர்கள் பிற்படுத்தப்பட்டோர் படிக்கிறார்கள் என்றால் 1928-ஆம் ஆண்டு நீதிக்கட்சி ஆதரவோடு அமைச்சர் பொறுப்பை வகித்து வந்த முத்தையா அவர்கள் வகுப்புவாரி பிரதிநிதித்து வம் என்ற சட்டத்தை அறிமுகப்படுத்தியதன் காரணமாகத் தான் பிராமணர்கள் பிராமணர் அல்லாதவர்கள் மக்கள் தொகை விழுக்காட்டிற்கு ஏற்றவாறு கல்லூரிகளிலும் வேலை வாய்ப்புக்களிலும் இடம் பெறவும் வழி வகுத்தது.

நான் இதைச் சொல்வதால் இங்கே நான் ஜாதிப் பிரச்சி னையைப் பேசுவதாகக் கருதக்கூடாது.

பிராமணர் சமுதாயம், பிராமணர் அல்லாதார் சமுதாயம் என்பது வரலாற்றில் யாரும் மறைக்க முடியாத பகுதியாகும். பிராமண வரலாற்று ஆசிரியர்களே அதனை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் படித்து முன்னேறிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் பிராமணர் அல்லாதவர்கள் படிப்பறிவு இல்லாதவர்கள். படிப்பதே பாவம் என்று கருதிக் கொண்டு படிப்பறையின் தலைவாசலையே எண்ணிப் பார்க்காதவர்களாக இருக்கிறார்கள்.

மக்கள் தொகையில் மிகக் குறைவானோர் கல்வியறிவு படைத்தவர்களாகவும், அதிக எண்ணிக்கை படைத்தவர்கள் கல்வியறிவு அற்றவர்களாகவும் தாழ்ந்த சூழ்நிலையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் உரிமை பெறத்தான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொண்டு வரப்பட்டது.

1951-ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டு அந்தச் சட்டம் முறியடிக்கப்பட்டது. அன்று இருந்த காங்கிரஸ் அமைச்சர் கம்யூனல் ஜி.ஓ. எந்த அளவுக்கு மக்களுக்குத் தேவையானது என்பதை மற்றவர்களுக்கு அறிவுறுத்த அதை உயர் நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்தார்கள்.

உச்ச நீதிமன்றத்திலும் கம்யூனல் ஜி.ஓ.வின் கழுத்து நெறிக்கப்பட்டது. அதற்குப் பிறகு, பண்டித நேரு அவர்களிடத்தில் தமிழ்நாட்டில் பேரறிஞர் அண்ணா பெரியார் உயர்த்திய போர்க் கொடியைச் சுட்டிக்காட்டிப் பெருந்தலைவர் காமராசர் அவர்களும் அன்றைக்கு இருந்த காங்கிரஸ் தலைவர்களும் நேருவிடம் சொன்னார்கள். அவர்களே அதைப்பற்றித் தெளிவாக உணர்ந்து அரசியல் சட்டத்தில் ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்து அந்தத் திருத்தத்தை நேரு அவர்களே ஆதரித்துப் பேசி அந்தத் திருத்தத்தின் அடிப்படை

யில் 51-ம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கல்லூரிகளில் சேருவதற்கான இட ஒதுக்கீடு 25 சதவிகிதம் என்றும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 15 சதவிகிதம் என்றும் மீதம் உள்ள 60 இடங்கள் எல்லா ஜாதிக்காரர்களும் போட்டியிடக் கூடிய இடங்கள் என்றும் முறைப்படுத்தப்பட்டது. அது ஒரு ஏற்பாடு என்றாலும் அதுகூட பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் போதுமானதாக இல்லை. இருந்தாலும் இதாவது கிடைத்ததே என்று மன ஆறுதலோடு ஏற்றுக் கொண்டார்கள்.

அதற்குப் பிறகு 71-ம் ஆண்டு முதல்வர் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டபோது சட்டப் பேரவையிலேயே சொன்னேன். பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட சமுதாயத்து மக்களுக்காக என்னுடைய ஆட்சிக் காலத்தில் என்னுடைய வாழ்வையே பணயமாக வைத்து வாதாடுவேன் - போராடுவேன் என்று சொன்னேன். நானே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவன். எனவே அவர்களின் நலனைக் கவனிக்க என்னுடைய ஆட்சிக்காலத்தில் தொடர்ந்து பாடுபடுவேன் என்று உறுதி அளித்தேன்.

பிறகு அதற்கெனச் சட்டநாதன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு சில பரிந்துரைகளைத் தந்தது. அந்தப் பரிந்துரைகளிலே ஒன்றுதான் 25 சதவிகிதம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று இருந்ததை மேலும் உயர்த்த வேண்டும் என்கிற பரிந்துரையாகும். 8 சதவிகிதம் உயர்த்த வேண்டும் என்றார்கள். 8 சதவிகிதத்தில் அதைப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கே உயர்த்தி விட்டால் அது நன்றாக இராது என்று 8-ல் 6 சதவிகிதத்தை எடுத்துப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு உயர்த்தி அதை 31 சதவிகிதம் என்றாக்கி, இரண்டு சதவிகிதத்தை தாழ்த்தப்பட்டவர்களுக்கு உயர்த்தி அதை 18 சதவிகிதம் என்றாக்கி அதற்கு மேல் உயர்த்துவதற்கு இடம் இருக்கிறதா? என்று கேட்டு அரசியல் சட்டப்படி உயர்த்த இயலாது

என்ற நிலைமை தெரிவிக்கப் பட்டதால் அது கைவிடப் பட்டது.

பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கப் பட்டது போக மீதி உள்ள 51 சதவிகிதத்திலும் ஒரு தனிப்பி ரிவு ஏற்படுத்தலாம் என்று கண்டு அதற்கு அரசியல் சட்டத் தில் எந்தவித இடையூறும் இல்லை என்பதைப் புரிந்து கர்நாடக முதல்வர் தேவராஜ் அர்சு அவருக்குத் தரப்பட்ட சட்ட ஆலோசகர்கள் கருத்துப்படி அவர் 51 சதவிகிதத்தில் எல்லா ஜாதியிலும் உள்ள ஏழைகளுக்கு 15 சதவிகிதம் என்று ஒதுக்கி இருக்கிறார். நான் இங்கே பொறுப்பில் இருந்திருந் தால் தேவராஜ் அர்சைப் பின்பற்றி 51 சதவிகிதத்தில் 15 சதவிகிதத்தைப் எல்லா ஜாதியிலும் உள்ள ஏழைகளுக்கு ஒதுக்கி இருப்பேன்.

ஐயோ! நான் முதல்வராக இல்லையே என்ற கவலை யால் நான் இதைச் சொல்லவில்லை. இந்தக் காரியத்தை உங்களுக்கு செய்யக்கூடிய இடத்தில் நான் இல்லையே என்ற வருத்தத்தில் சொல்லுகிறேன்.

15 சதவிகிதத்தை ஒதுக்கினார் யாருக்கு? பிராமண சாதியிலே உள்ள ஏழையானாலும், முதலியார், செட்டியார், மற்றும் உள்ள உயர்சாதிக்காரர் ஆனாலும் பிற்படுத்தப்பட் டோர், தாழ்த்தப்பட்டோர் ஆகிய வகுப்புகளில் உள்ள எல்லா ஏழைகளுக்கும் கர்நாடகத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த நிலை தான் இங்கேயும் பின்பற்றப்பட வேண் டுமே அல்லாமல் 'உழக்குக்குள்ளே கிழக்கு மேற்கு'ப் பார்ப் பதைப் போல் பிற்படுத்தப்பட்ட ஜாதிக்குள்ளேயே ஏழை, பணக்காரன் என்று பார்த்துக் கொண்டிருப்பது நியாய மில்லை. தர்மம் அல்ல. எதிர்காலத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பெரிய இருள் கவிழ்ந்த நிலை ஏற்பட்டுவிடும் என்று நாம் எச்சரிக்கிறோம். எதிர்க்கட்சியின் சார்பிலே

சொல்லுகின்ற காரணத்தால் ஏதோ வேண்டுமென்றே அரசுக்கு விரோதமாகச் சொல்லுகின்ற கருத்துக்கள் என்று எடுத்துக் கொள்ளாமல் அவைகளை மறுபரிசீலனை செய்யப் பொறுப்பிலே உள்ளவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

மாணவர்கள் இருக்கிறீர்கள். உங்களுக்கு ஒரு முதல்வர் இருக்கிறார். உங்கள் நியாயமான கோரிக்கைகளைக் கேட்டுப் பரிசீலித்து நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அவருக்கு இருக்கிறது.

கல்லூரி முதல்வர் நல்லெண்ணம் படைத்தவராக, தமிழ்க்குடிமகனாக இருக்கிற காரணத்தால் நிச்சயம் அந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து நிறைவேற்றும் ஆர்வம் படைத்தவராக இருப்பார். அதுதான் நிலை.

அதுபோலத்தான் பொறுப்பில் இருப்பவர்கள் யாராக இருந்தாலும் எழுகின்ற கோரிக்கை எங்கிருந்து எழுகின்றது என்று பாராமல் 'எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்ற அந்தக் குறளின் அடிப்படையில் ஆராய்ந்து நீதி வழங்கத் தயாராக இருக்கவேண்டும்.

இன்று தமிழ்க்குடிமகனுக்கு ஏற்பட்டிருக்கிற நிலை என்ன? நான் கல்லூரி முதல்வரைச் சொல்லவில்லை. தமிழ்ச் சமுதாயத்தைச் சொல்லுகிறேன். எதிர்காலம் என்ன ஆகுமோ என்ற அச்சத்தோடு - கேள்விக் குறியோடு இருக்கிறார்கள். அவன் எடுத்து வைத்திருக்கிற ஒவ்வொரு அடியிலும் நெருஞ்சிமுள் குத்துகிறது. அடுத்த அடி வைத்தால் கருவேல முள் குத்துகிறது. அதற்கு அடுத்த அடி வைத்தால் ஈட்டியோ, வேலோ, வாளோ குத்தும் என்கிற அளவுக்கு அவனுடைய எதிர்காலம் சிக்கலாகிக் கிடக்கிறது.

இதற்கு ஒரு மாற்றுத் தேவை. இதற்கோர் வழிபிறந்தாக வேண்டும். தமிழ்க்குடி மகன் காப்பாற்றப்பட வேண்டும்

என்ற சூளுரையை மேற்கொள்ள வேண்டியது இன்றைய மாணவர்களாகிய உங்கள் கடமையாகும்.

இதை நான் பேசுகிற காரணத்தாலேயே யாதவர் கல்லூரிக்குக் கருணாநிதி வந்தான்; மாணவர்களைத் தூண்டிவிடும் காரியத்தைச் செய்தான் என்று யாராவது சொல்வார்களேயானால் நான் இங்கே ஆற்றும் உரை உங்களைத் தூண்டிவிடுவதற்காக அல்ல. யாரையும் உணர்ச்சி வசப்பட்டுத் தகாத காரியங்களில் ஈடுபடச் செய்வதற்காக அல்ல. சிந்தித்தாலே போதும். மாணவர்கள் சிந்தித்தாலே மற்றவர்கள் செயல்படுவதற்குச் சமானமாகும். எனவே நீங்கள் சிந்தித்தால் போதும். செயல்பட நாங்கள் இருக்கிறோம்.

நீங்கள் சிந்திக்க மறந்து விடுவீர்களானால், எதிர்காலம் எவ்வளவு ஆபத்தானது என்பதை உணர மறந்து விடுவீர்களானால், நாம் படிக்கிறோம் - நம் குடும்பம் வாழுகிறது என்ற அந்த எண்ணத்தோடு உங்கள் நிலையை நிறுத்தி விடுவீர்களானால், நமக்குப் பிறகு நம்முடைய எதிர்காலச் சமுதாயம், நம்முடைய சந்ததியினர் என்ன ஆவார்கள் என்பதைப் பற்றிய எண்ணத்தை அறவே விட்டு விட்டோம் என்ற பழிக்கு ஆளாவோம்.

# நம்பிக்கைக்குரிய...

திருச்சித் தேவர் மன்றத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்ட நூல்வெளியீட்டு விழா. நூலை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றியவர் தலைவர் கலைஞர் அவர்கள். சின்னத்தாராபுரம் சி.இறையரசன் எழுதிய 'குறளும் பொருளும்' எனும் நூலைப் படித்துத் திறனாய்வுரை நிகழ்த்தும் வாய்ப்பு எனக்கு. அப்போது தலைவர் கலைஞர் அவர்கள் பேசிய உரையிலிருந்து ஒரு பகுதி.

''நான் இப்போது 'குறளோவியம்' எனும் பெயரில் குறளுக்கு விளக்கவுரை எழுதி வருகிறேன். நான் எழுதிய எல்லாவற்றையும் அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டுமென்ற தேவையில்லை. குறளோவிய உரையில் குறையிருப்பதாகக் கருதி நமது தமிழ்க்குடிமகனைப் போன்ற நம்பிக்கைக்குரிய பேராசிரியர்கள் ஓர் அஞ்சலட்டையில் எழுதிப் போட்டால்கூட நான் திருத்திக் கொள்ளத் தயார்.''

# நாளைய வரலாறு நமக்காக!

*(மதுரை எட்வர்டு மன்றம் பாரதி நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது. அதன் செயலர் திரு. பழநிக் குமாரசாமி அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களைக் கவியரங்கத் தலைமை தாங்க அழைத்திருந்தார். கவிஞர்களைத் தேர்ந்தெடுத்து அழைத்துப் பங்குபெறச் செய்யும் பொறுப்பு என்னிடம் தரப்பட்டது. கவிஞர்களும் தக்க கவிதைகளுடன் வந்துவிட்டனர். தலைவர் கலைஞர் அவர்கள் கடுமையான சுற்றுப்பயணம் காரணமாகக் கவிதை எழுத நேரமில்லாது போய்விட்டது. காலை 11 மணிக்குத்தான் நான் அந்தப் பொறுப்பை ஏற்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. தலைவர் கலைஞர் அவர்களை வைத்துக்கொண்டு கவியரங்கத் தலைமையா! ஓர் இனம்புரியாத அச்சம்! கிறுகிறுப்பு! என்றாலும் தலைவர் கட்டளையாயிற்றே! அப்படிக் கலந்து கொண்டபோது தலைவர் கலைஞர் அவர்களைக் குறித்து நான் பாடிய வரிகள். 23.6.1982)*

**கோட்டையிலே உன்றன் கொடிபறந்த காலத்தில்**
**பாட்டை அறிந்த பலர் பாடிக் குவித்திருந்தார்**
**ஏட்டை அறிந்தவுடன் தூவல்தனை எடுத்து**
**எழுதிக் குவித்தவர்கள் எத்தனையோ பேர்உண்டு.**

கலைஞர் பெயராலே தொகுப்புக் கவிதைகளும்
கணக்கின்றி வந்துள்ள காலத்தை நானறிவேன்
சிறிய இலக்கியங்கள் இவையென்று கூறுகின்ற
நெறியில் உனைப்புகழ்ந்தோர் எத்தனையோ எத்தனையோ

கலைஞர் உலாவென்றும் காவியம் இது என்றும்
மும்மணிக் கோவை என்றும் நூறாண்டு வாழ்க என்றும்
முத்தாரம் சூட்டி முழுதும் உனைவாழ்த்திப்
பிள்ளைத் தமிழ் பாடிப் பெருமை உனக்காக்கித்
தங்கள் புகழ்வளர்த்துத் தங்கட்கொரு வாய்ப்பைப்
பெற்றுச் சிறந்தவர்கள் பெயரை எடுத்தவர்கள்
பன்னூறு பேராம்; பார்த்தேன் அவர்களையும்

ஆனாலும் சில்லோர் அன்றைக்கும் உதட்டளவில்
வீணான சொல்லுதிர்த்து மேடைப் புகழ்பெற்று
வாழ்வு கிடைக்கும் வரை வாய்ப்பைப் பிடித்திருந்து
சற்றுச் சரிவுனக்கு வந்துவிட்ட தெனவறிந்து
கூடாரம் மாற்றியிங்கு கூறியதையே கூறி
ஏடாயிரம் எழுதி ஏய்க்கின்றார்; என்செய்வேன்!

நன்றி மறந்தவர்கள் வாழ்ந்தாலும் நீ அரசன்
அன்றைக்கே அந்த உதவிகளை மறந்து விட்டாய்
காரணம் நானறிவேன், கலைஞர் சிறப்பறிவேன்
கைம்மாறு வேண்டாத கடப்பாடு கொண்டவன் நீ
வானமழை போல வான்புகழைப் பெற்றவன் நீ

குறளோ வியந்தீட்டிக் கோடானு கோடிஉள்ளம்
கொள்ளைகொண்ட பேரறிஞன்; இன்றுவரை திரையுலகில்
உன்னதுபோல் துடிப்புடைய உரையாடல் வந்ததில்லை
கனல்கக்கும் வசனத்தைக் கருணாநிதித் தமிழன்
எழுதியது போலெவரும் இதுவரைக்கும் எழுதவில்லை

அந்த உரையாடல் அருங்கலைஞன் சிவாஜியின்

சந்தக் குரலில் இணைந்து வரும்போது
கேட்டவர்கள் கிறுகிறுத்தார்; என்றும் நினைத்திருப்பார்
அதைக்கூடக் குறைசொல்லும் அன்பர் சிலரிருப்பார்;
கிறுக்குப் பிடித்த அந்தக் கீழ்களைஏன் சிந்திக்க?

மற்றவர்போல் நான்புகழ்ந்து ஏதோ ஒரு வாய்ப்பில்
பற்றுவைத்த குற்றத்தை நான்புரியப் போவதில்லை
(நீ) ஆளுகின்ற காலத்தில் அருகில் நான்வந்ததில்லை
முடிசூடா மன்னனென மூவுலகும் போற்றுகையில்
பக்கத்தில் வாராமல் பார்த்துக் களித்தவன்நான்

ஓரத்தில் நின்றவனை உன்னருகே கொண்டுவந்து
பாடி வழுத்திடவும் பார்த்துக் களித்திடவும்
செய்ததெது சொல்விடுவேன்; கேட்போர்கள் சிந்திக்க!
பலபத்து ஆண்டுகளாய்ப் பாதையினை மாற்றாமல்
நிற்கின்ற ஒன்றே நின்னருகில் தள்ளியது!

உண்மைக் கலைஞன்நீ! உன்புகழை என்றும்
பூம்புகார் பேசும், புறத்திலே உன்பெயரைப்
பொறிப்பதற்கு முடியாமல் போனாலும் நாளைக்கு
வள்ளுவர் கோட்டம் உன்பெயரே சொல்லிநிற்கும்

உண்மைத் தமிழ்க்குருதி ஓடுகின்ற காரணத்தால்
சொல்ல நினைக்கின்றேன்; சொற்றமிழில் வல்லவனே!
நாளை வரலாறு நமக்காகக் காத்திருக்கும்
வேளை வருமட்டும் விழிப்போடு நாம் உழைப்போம்!

# பாண்டித்துரைத் தேவர் படத்திறப்பு

ஈழத் தமிழர் சிக்கல் மேலோங்கி நின்ற காலம். இலங்கையில் கண்டி, நுவரேலியா, கொழும்புப் பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் வெட்டிக் கொல்லப்பட்டுப் பல நூற்றுக்கணக்கானோர் அகதிகளாக ஓடி வந்த வேளை. இந்த நேரத்தில் இராமநாதபுரத்தில் தி.மு.கழக மாநாடு நடைபெற்றது. கல்லூரி முதல்வராக இருந்த நான் இந்தக் கட்சி மாநாட்டில் கலந்துகொண்டு தமிழுக்குத் தொண்டு செய்த பாண்டித்துரைத் தேவர் படத்தைத் திறந்து வைத்துப் பேசினேன். எனக்குப் புகழ் சேர்த்த பேச்சு அது. நான் பேசி முடித்துவிட்டு என் இருக்கைக்குத் திரும்பிய போது தலைவர் அவர்கள் ஒன்றிரண்டு வரிகளில் என்னை வெகுவாகப் பாராட்டினார்.

''இலங்கைத் தமிழர் சிக்கல் என்றாவது ஒருநாள் தீர்ந்து விடும்; ஆனால் உங்கள் பேச்சின் சிறப்பு என்றும் அழியாது'' என்ற வரிகள் என் வாழ்நாள் முழுவதும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

# கலைஞரின் கவிதைகள்

**(தலைவர் கலைஞர் அவர்களது மணிவிழாவின் போது எழுதப் பெற்றது - 1984)**

***''உள்ளத்துள்ளது கவிதை - நெஞ்சில் ஊற்றெடுப்பது கவிதை''*** என்று கவிதையின் பொது இயல்பு பற்றிக் கூறுவார்கள். கவிதைக்குள் அடங்கும் கருத்து, வடிவம், உணர்ச்சி கற்பனை ஆகிய நான்கினையும் வைத்துக் கொண்டுதான் அந்தக் கவிதையின் தரம் என்ன என்பதை வரையறுக்க முடியும்.

பாடுபவனது உணர்ச்சித் துடிப்புத்தான் கவிதையின் எல்லாப் பகுதியிலும் பளிச்சிடும். உண்மையான உணர்ச்சி யில் பீறிட்டுக் கிளம்புகிற கவிதைக்கும்; பாட்டரங்கில் ஒரு தலைப்பைக் கொடுத்துவிட்டார்களே என்று சிலர் படைக் கும் கவிதைக்கும் உள்ள வேறுபாட்டை நாம் அறிவோம். எனவே உள்ளத்தில் உள்ள நல்ல உணர்ச்சி கவிதை வடிவில் வெளிப்படுத்தப்படும் போது அது நம்மைக் கவர்கின்ற கவிதையாகி விடுகிறது.

'உள்ள உணர்ச்சிகளை நல்ல தமிழ் வரிகளால் பாடியி ருக்கிறேன்' என்று கலைஞர் முன்னுரையில் கூறுவது பொருத்தமாகவே உள்ளது. 'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்.'

கலைஞர் நல்ல தமிழில் நயம்படப் பாடுபவர்.

**'இரு வரிசை ஏற்று**
**இருவர் இசைவு ஏற்றுத் தம்**
**இரு வரிசை விட்டு**
**ஒரு வரிசை யாவதற்கு ஒருப்பட்ட ஒளித்தங்கம்'**

என்று பெண்ணைப் பற்றிப் பாடுகிறார். நல்ல தமிழில் நயம்பட அமையும் இக்கவிதை உள்ள உணர்ச்சிகளை ஒழுங்காக வெளிப்படுத்துகிறது. இன்று புதுக்கவிதை பற்றி வரையறை செய்கின்ற திறனியர் (Critics) வடிவத்தை முன்னிறுத்துவது மரபுக்கவிதை; கருத்தை முன்னிறுத்துவது புதுக்கவிதை என்கின்றனர். மரபு அறிந்து மரபு மீறிய கவிஞர்கள் புதுக்கவிதையிலும் வெற்றி கண்டார்கள். ஆனால் யாப்பு வேலியை அகற்றி விட்டார்கள் என்று தெரிந்தவுடன் கண்டவர்கள் எல்லாம் கிறுக்கத் தொடங்கி அதற்குப் புதுக்கவிதை என்று பெயரும் இடத் தொடங்கி விட்டார்கள். 'யாப்பு வேலி அகற்றப்பட்டதால் கண்டவர்கள் எல்லாம் மேய வந்துவிட்டார்கள்' என்று அப்துல் ரகுமானும் உறுதிப் படுத்துகிறார்.

அதே நேரத்தில் கலைஞர் மரபுவாயிலான சந்தங்களை அப்படியே கையாள முடியவில்லை என்பதையும் சீர்தளை பார்த்தால்தான் கவிஞராக முடியாது என்பதையும் அடக்கத்தோடு குறிப்பிடுவார். சீர், தளை, அணி என்றெல்லாம் யாப்பில், தமிழில் சில இலக்கணச் சொற்கள் இருப்பதே தெரியாமல் புதுக்கவிதை எழுத வந்த புற்றீசல்கள் பல உள்ளன. இந்நிலையில் மரபு அறிந்து, புதுமை படைக்கும் கலைஞர் சிறந்த கவிஞரே என்பதை கவிதையில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்ற என்னால் உறுதியாகக் கூற முடியும். ஆனால் அதே நேரத்தில் கலைஞரிடத்தில் என்ன அழகான அவையடக்கம்!

*'ஈரணியாய் நிற்கின்ற கவிஞரிடைச்*
*சீரணிகள் தெரியாத நான் தலைவன்'* என்கிறார்.

விடுதலை வீரர்களைப் பற்றிப் பாடும்போது அவர் தன்னை அடையாளம் காட்டுகிறார்.

*'தலையறுத்த வீரர் கதை பாடுவதால்*
*தளை யகற்றிப் பாடுகின்றேன் நானும் - அவர்*
*தொடை தட்டித் துரோகிகளை வீழ்த்தியதால்*
*தொடை தட்டும் என் பாட்டும்! என் கவிதை*
*யாப்பின்றிப் போனாலும் போகட்டும் -*
*நம்நாடு, மொழி மானம் உணர்வெல்லாம்*
*காப்பின்றிப் போதல்கூடாதெனும் கொள்கை யொன்றால்*
*வாய்ப்பின்றி நிற்கின்ற மரமாக ஆகாமல் - நெஞ்சில்*
*ஊறுகின்ற உணர்ச்சிகளை வரிகளாக்கிக் கொள்கை*
*மாறுகின்ற கோடரிகள் உணர்வதற்கு ஒன்று; சொல்வேன்.*

நாடு, மொழி, இனம் காக்கப்படவேண்டும் எனும் உணர்வில் தெளிவாக இருக்கும் கலைஞர் அதனைத் தெளிவு படுத்துகிறார் அடக்கத்தோடு.

எனவே ஒரு கொள்கை உடைய கவிஞர், அந்தக் கொள்கைகளை மறவாமல் பாடும், மறவாமல் போற்றும் கவிஞர், வெறும் பேச்சோடு எழுத்தோடு நின்றுவிடாமல் முன்னணியில் நின்று செயல்படுங் கவிஞர், வாய்ப்பு நேரும் போதெல்லாம் தன் கொள்கையையும் கவிதைக்குள் செருகி விடுவார்.

*'ஒருமைப் பாடு காண இந்தியாவும் - நம்*
*உரிமைப்பாடு காணத் தமிழகமும்*
*உயர்தனிக் கொள்கையென கொண்டுவிட்டோம்'* என்கிறார். அதே நேரத்தில் கருத்தினை எடுத்துவைப்பதில் கலைஞர் எந்த இடத்திலும் இடர்ப்பட்டதில்லை. கவிதையில் எந்த இடத்திலும் தடுமாற்றம் நேர்ந்ததில்லை.

**'பறக்காமல் இருக்கின்ற பறவை நான் - இலக்கணச் சிறகு**
**முளைக்காமல் தவிக்கின்ற கவிக்குஞ்சு நான்**
**பறக்காமல் இருக்கின்ற பறவை நான் - கூடுவிட்டுக் கூடு**
**பறக்காமல் இருக்கின்ற பறவை நான்'**

தன் நலம் தன் வாய்ப்பு என்று கருதிப்பார்த்து அந்த அளவுகோலுடனேயே அலைந்து கொண்டிருக்கும் சிலர் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து விடுகின்றனர். கடந்த பிறந்தநாள் விழாவின்போது நடைபெற்ற கருத்தரங்க மேடையில் இருந்த இரண்டு பேரைக் காணவில்லை. வேறு கூடு தேடிப் போய் விட்டார்கள். கலைஞர் தன் கவிதையில் தன் தன்மை யையும், நிலை மனம் இல்லாத நீசர்களின் தன்மையையும் பிட்டு வைத்து விடுகிறார். ஆனால் அதே நேரத்தில் தமிழகக் கவிஞர்கள் ஓர் உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும். ஒரு கவியரங்கம் என்றால் நூறு, இருநூறு பேர் வந்து கேட்பார் கள். அல்லது பின்னால் வரப்போகும் நிகழ்ச்சிக்காகவும் சேர்த்து ஒரு ஆயிரம் பேர் கேட்பார்கள். ஆனால் கவியரங்கத் திற்குப் பல்லாயிரம் பேர் வந்து கேட்கும் அளவு அதற்குச் செல்வாக்கை உண்டாக்கியவர் கலைஞராகிய கவிஞர்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. அவர் தலைமையில் பாடியதாலேயே பல இலட்சக்கணக்கான மக்கள் முன்னிலை யில் கவிஞராக நிமிர்ந்து நின்று, தத்தம் செல்வாக்கினையும் பல கவிஞர்கள் வளர்த்துக் கொண்டனர். தமிழகக் கவிஞர் ஒருவர், கவிஞர் ஏறு ஒருவர் வெளிநாட்டில் ஒரு நிகழ்ச்சிக் குப் போயிருந்த போது கேட்பதற்கு இரண்டே பேர்தான் வந்திருந்தனர் என்பது செய்தி. எனவே கவிதைக்குக் கலைஞ ரால் பெருமை கிடைத்தது. கவிஞர்களுக்கும் புகழ் கிடைத்தது என்பது உண்மை.

உற்பத்திப் பெருக்கம் பற்றி அவர் பாடிய கவிதைதான் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு அரசு தந்த விளம்பரமாக அமைந்தது. அந்தப் புகழ்பெற்ற வரிகள் கருத்தாழமிக்க கலைஞரது கவிதைக்குச் சான்றுகள். முத்தென்றும் மணி

யென்றும் கணக்கின்றிப் பெறுதல் விட்டு நெல்லென்றும் வரகென்றும் உணவு பெருக்கிட அவர் கவிதை அழைக்கிறது. கலைஞர் கையாளும் உவமைகள் சிலவற்றைக் காண்பது அவரது கவிதைச் சிறப்பை உணர்த்தும். விடுதலை மறவர்கள்

**'உறைமீறி வெளிவந்த கத்திபோல**
**உயிர்மீது ஆசையின்றிப் போர் புரிந்தார்'** என்கிறார்.
**'வானத்து மீன் பெண்கள்; கூட்டுப்பேச்சே**
**இடிக்குமுறல்; அவர்**
**வாளொத்த கண்வீச்சே மின்னல் கீற்று;**
**வட்டமுகில் காதலன்மேல் தெரிக்கின்ற**
**பன்னீரே மழைத் துளியாம்'** என்று இளைஞர்களுக்கு பிடிக்கும் இனிய உவமையை அடுக்குகிறார்.

வழக்கமாக

**'ஏடெடுத்தேன் எழுதி முடித்தேன் என்றே**
**என் வழக்கம் இதுவரையில்'** என்று கூறுபவர் ஒருமுறை கவியரங்கிற்கு வருமுன்னர் சென்னை நகரக் குடிசைகள் தீயில் எரிந்து நாசமான நிகழ்ச்சியின் கசப்பினை மனத்தில் போட்டுக் கலங்குவதால் உடனே கவிதை எழுத முடிய வில்லை. அதை எப்படிக் கூறுகிறார் பாருங்கள்.

**ஓடெடுத்த பரதேசி - பல**
**வீட்டுத்தும் பயனின்றி நிற்பது போல் நிற்கின்றேன்...**
என்கிறார்.

**'வாழப்பிறந்தவன் தான்மட்டு மென்று,**
**தாழப்பறந்து மீன்கொத்தும் பறவை போல் -**
**வலியோர் சிலர் எளியோர் தமை**
**வதையே செய்தல் வாடிக்கையாம்;** என்பதும் உவமைதான்.

புகழை நாடி ஓடுபவர்களுக்குப் புரியும்படி ஓர் உவமை யைத் தருகிறார்.

**கடற்கரையில் தலைநீட்டும் நண்டுகளைக்**
**கை நீட்டிப் பிடிக்க ஓட...**
**உடனவைகள் போன இடம் தெரியாமல் பதுங்கி விடும்...**
**புகழும் அதுதான்!...**

எந்தக் கவிஞரும் கருத்துக்களைச் சொல்லாமல் வெறும் சொற்களை மட்டும் வீசிக் கொண்டிருந்தால் அவை காலப் போக்கில் ஒலிச் சருகுகளாய் உதிர்ந்துபோகும்.

கலைஞர் கருத்துக்காகவும், தமிழின்பம் கருதியும்தானே கவிதை படைக்கிறார். அவர் கவிதை கருத்துக் கருவூலம் என்பதுதானே உண்மை.

**'ஐம்புலனை இயக்காமல் இருப்பதுபோல் நடிப்பதுவும் சூது**
**ஐம்புலனை அவித்துவிட்டுக் கோயில் மாடாய்த் திரிவதும் தீது'**

மூளைபற்றிக் கூறும்போது,

**இல்லாதார் பலருண்டு - அவர்கள்**
**இல்லாதார்... உலகில்**
**இருந்தும் இல்லாதார் - சிலருக்கு**
**எள்ளிருக்கும் அளவுக்கு அஃதிருக்கும்; அதிலும் நிறையக்**
**கள்ளிருக்கும் அதனாலே கண்டபடி கிறுக்கும்'** என்கிறார்.

காதலையும் வீரத்தையும் பற்றிப் பாடும்போது,

**வீரமில்லாக் காதலினால் விரக்தியுண்டு**
**வாழ்வில் துணிவே இல்லை...**
**காதலில்லா வீரத்தில் கடுமை யுண்டு**
**வாழ்வில் கனிவே இல்லை...**
**அவையோர்க்கு என் தீர்ப்பை அறிவிக்கின்றேன்**
**காதலும் வீரமும் ஒட்டிப் பிறந்த**
**இரட்டைக் குழந்தை -**
**இதற்குக் குடும்பக்**
**கட்டுப்பாடில்லை; பெற்றிடுவீர் தாராளமாக!**

என்கிறார்.

இப்படி எண்ணற்ற கருத்துக்களை எழுதி வைக்கும் கலைஞர் சிறந்த வருணனைத் திறம் படைத்தவர் என்பதை நாடறியும். திரைப்பட உரையாடல்களிலும் சரி, உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலம் பற்றிய விரிவுரையிலும் சரி கலந்து வருணிக்கும் திறம் சிறப்பாகவே மிளிர்ந்து நிற்கும். அத்திறம் கவிதையில் எப்படி அமைகிறது பாருங்கள்.

**மழையிடை வந்து மலையிடை தழுவி**
**இழையிடை வந்த பொன்துகில் போலத் - தாழத்**
**தழையிடை வந்து தலையினை நீட்டும்**
**மடலதுபோல, மாதர்**
**குழலிடை வந்து கோலம் காட்டும்**
**வகிடது போல**
**களிநடை பூண்டு காவினில் சென்று**
**காவிரி யானாய்...**
**அணிமணி பூண்ட பெண்ணே யானாய்...**
**பெண்ணே என்றார்**
**பெண்ணை என்றார்...**

ஆறுகளைப் பற்றிய அவர் வருணனையும் இப்படி ஆறாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது.

பொதுவாக எந்தக் கவிஞனுக்கும் சொல்லாட்சித் திறன் (Poetic Diction) வேண்டும். பாடும்போது பொருள் பிரித்தும் பலவகையாக நயம் சேர்க்கும் சொல்லாட்சித் திறன் கலைஞர் கவிதைகளில் எல்லை மீறிக்கிடக்கிறது.

**'எதில் முதல்வனாய் இருக்க வேண்டும் நண்பன்;**
**இன்ப விளையாட்டில்**
**இடித்துரைக்கும் பண்பாட்டில் இதில்**
**எதில் முதல்வனாய் இருக்கவேண்டும் நண்பன் என்று**
**எழில் முதல்வன் எழுத்தாரம் சூட்டுகின்றார்'**என்கிறார். சொற்கள் எப்படி வந்து அமர்கின்றன என்பதை இங்கே காணலாம்.

சில நேரம் நாம் வழக்கமாகக் கையாண்டு வரும் சில தொடர்களுக்கும், பழமொழிகளுக்கும் புது விளக்கம் கிடைக்கும். கேள்வியின்பமானது ஏற்கனவே உள்ள கவிஞர் படைப்புகளை நயம்பட எடுத்துரைத்துப் புதுவிளக்கமும் காட்டும்போது தானே ஏற்படும்? மக்களும் அதற்காகத் தானே அரங்குகளை நாடி வருகின்றனர்.

**'கிணறுவெட்டப் பூதம் புறப்படும்'** என்பதற்குக் கலைஞர் தரும் விளக்கம் புதுமையாக உள்ளது.

**''கிணறுவெட்ட 'மண்' குவியும் - ஒருபூதம்**
**(மண்)**
**பூமிக்குள் அடைந்திருந்த காற்று**
**வெளிக் கிளம்பும் - மறுபூதம்**
**(காற்று)**
**பொங்கிவரும் புதுநீரே அடுத்த பூதம்...**
**(நீர்)**
**பொலிவுமிகு வான் தெரியும் நீர்மீது**
**நாலாம் பூதம்! (விண்)**
**புவியாளும் ஆதவனின் தீக்கதிரால்**
**அந்நீரும் தூய்மையாகும்...**
**ஐந்தாம் பூதம் (தீ)**

ஒரு கவியரங்குக்குத் தலைமை தாங்கும்போது பாடுவோரையும், அவரவர் தம் தலைப்புக்களையும் அலசி ஆராயவேண்டும். அந்த வேளைகளில் கலைஞரது இலக்கியப் பயிற்சி வெளிப்படுவதைக் காணலாம். காதலும் வீரமும் கலந்து பாடும்போது,

**'கொல்லேற்றுக் கோடஞ்சுவானை - மறுமையும்**
**புல்லாளே ஆயமகள்'** எனும் கவி வரியையும் அழகாக எடுத்துக் காட்டி விடுவார் கலைஞர். கலைஞரது கவிதைகளில் எந்தப் பக்கம் புரட்டினாலும் கேலி, கிண்டல், நயம் இருப்பதைக் காணலாம். அதிலும் வீட்டுக்குள் இருந்து

எழுதி இதழில் வெளிவந்த, பின் எவரெவரோ படித்துப் பார்த்துச் சுவைக்கும் அளவில் அவர் கவிதைகளைப் படைப் பதில்லை. அவர் கவிதை மக்கள் அரங்கில் படிக்கப்பட்டு அவர்கள் கேட்டு இன்புறவும் ஆரவாரிக்கவும் வாய்ப்பாக நயத்துடன் அமைந்தாக வேண்டிய கட்டாயக் கட்டுப்பாடு கள் உள்ளவை. அவர் கவிதை அரங்கேறிய கவிதை; பல்லா யிரம் மக்களைக் கொண்ட அரங்குகளில் ஏறிய கவிதை. அதில் நயம் இருந்தால்தானே நாடு மகிழும்; நாடு ஏற்கும்; இல்லாவிட்டால் படிக்கப்பட்ட இடத்திலேயே எழுதிவந்த கவிதை மடிக்கப்பட்டுப் பைக்குள் திணிக்கப்பட்டாக வேண்டுமே?

நயமான சில இடங்களைக் காண்போம்.

**'குற்றால அருவி நிகர் குழல் கொண்ட**
**பொற்றாமரையின் பால் காதல்! அதற்காக**
**விற்றானோ வீரம்; களத்தில்! இல்லையில்லை சிந்துபாடும்**
**சிற்றாறாய் இருக்கின்றான் இதிகாசத்தில்'**

இது அபிமன்யு பற்றிய விளக்கம் என்றால் வியப்பாக இல்லையா?

**''தொண்டர் பிள்ளைக் கறி யளித்தார் - திருத்**
**தொண்டர் பிள்ளைக் கவி யளித்தார் - இன்று**
**கண்டர் பிள்ளைக் கறி வளித்தார் - பிள்ளைக்கு**
**அறிவு அளித்தார்**

வேலூரில் கல்லூரி நிறுவிய கந்தசாமிக் கண்டர் பணியைப் பெருமைப் படுத்தும் நயமான இடம் இது.

கடலைப் பற்றிய அவர் விளக்கம்

**''பரந்த மனம் என்பதற்கு ஊமையாகி**
**சிலகாலம் ஊழியாகி உலகிற்குத் தீமையாகி பின்**
**சினம் அடக்கும் துறவிபோல் ஆமையாகிச்**
**சீறும் அலை சுருக்கிக் கொள்வாய்''** என்கிறார்.

**''பருவமும் வேறிலை - பனிமலர் - இருகனி மரம்**
**இடையிலோ, எழில் நடையிலோ விழியாம் வேற்**
**படையிலோ, இதழ்க் கடையிலோ**
**முரணிலை முறுவலும் ஒரு நிலை''** என்கிறார்.

**''இகழ்வார்க் கிருப்பது தலையும் அல்ல;**
**ஏசிக் கிறுக்குதல் கலையும் அல்ல**
**புகழ்வார் பின்னே போதலும் தீது**
**இகழ்வார் எதிர்த்தல் அதனிலும் தீது**

இது கருத்தாழமிக்க நயம்.

**'கலைத் திலகம் என்றாலோ பட்டமாகும்!**
**கலை - திலகம்! என்றாலோ; மங்கை பட்டமரமாவாள்!**

இதுவும் நயம்தான்.

இத்தகு நயம் காட்டும் கலைஞர் கையறு நிலைப் பாடலில் இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற கவிஞர் என்ற பட்டத்தைப் பெற்றுவிட்டார்.

பறம்பைப் பிரியும் போது கபிலர் புலம்பியதைவிட, பாரியை நினைத்து ஔவை அலறியதை விட, அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலாவில் இருந்த தந்தையை நினைத்து ஏங்கும் பாரி மகளிரைவிட, 'முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே' எனும் புறப்பாடலை விட அண்ணா மறைவின் போது கலைஞர் பாடிய கவிதை காலம் கடந்து வாழும் சாகா இலக்கியமாகும்.

**'நாத இசை கொட்டுகின்ற**
**நாவை ஏன் சுருட்டிக் கொண்டாய்'**
**விரல் அசைத்து எழுத்துலகில்**
**விந்தைகளைச் செய்தாயே; அந்த**
**விரலை ஏன் மடக்கிக் கொண்டாய்?'**

என்று விரியும் அவர் கவிதை சொல்லில் அடங்காத துயரைத் தொட்டுக்காட்ட முயல்கிறது, அவராலும் அடக்க முடியாத

அவலம் முற்றிலும் உணர்த்திவிடாமலும், முற்றிலும் மறைத்து விடாமலும் நம்மை இங்குமங்கும் ஊசலாடவிடு வது தானே கவிதை! அதைக் கலைஞரின் கையறுநிலைப் பாடல் தெளிவாக்கிச் செல்கிறது. இதுகுறித்து மட்டும் தனியே ஆய்வு செய்யவேண்டும்.

இத்தகைய சிறப்புப் படைத்த கலைஞர் தமிழை வளர்த் தவர், தமிழால் வளர்ந்தவர்; தமிழைக் காத்தவர், தமிழால் காக்கப்படுபவர்.

**'உடல் இளைத்துப் போனாலும் உயிர்மட்டும்**
**இளைக்கவில்லை - நெஞ்சில்**
**சுடர் வழங்கத் தமிழிருக்கச் சோர்வுதான் மேவிடுமோ?'**

என்று உருகுபவர்.

**''சின்னச் சேவல் சண்டை - காசுக்கு**
**மன்னர் போடும் சண்டை - நாட்டுக்கு**
**நீங்கள் போடும் சண்டை - பாட்டுக்கு**
**நாங்கள் காணும் சண்டை - தமிழுக்கு'**

என, கவிதை பாடுவதே தமிழுக்காக தமிழ் வளர்ச்சிக்காக என்று கருதுபவர். அந்தத் தமிழ் கலைஞரை என்றும் கவிஞ ராக, தமிழினத்தில் தன்னேரிலாத மகனாக வாழ வைக்கும். ஆனால் நாம் சிந்திக்க வேண்டிய ஒன்று.

கலைஞரின் தமிழ்ப்பற்றே கலைஞருக்குப் பலவீனம்; ஆம்! கர்ணன் சிறப்பெல்லாம் அவன் கொடையில்தான். கர்ணன், பிறர் எது கேட்டாலும் இந்தப் பிறவியில் மறுத்தறி யான்; உயிரே எனினும் ஈந்திடுவான். இது கர்ணனுக்குரிய கர்ணனுக்கேயுரிய பலம். இந்தப் பலமே அவனது பலவீன மாகிவிட்டது. கண்ணன் கர்ணனின் கொடைப்பலத்தைத் தானே பலவீனமாகப் பயன்படுத்திக் கொண்டு கர்ணனுக்கு வீழ்ச்சியை ஏற்படுத்தினான்.

இதுபோல் கலைஞரின் தமிழ்ப்பற்றைப் புகழ்ந்தும் அவரது தமிழ்ப்பசிக்குத் தீனிபோட்டும், அவர் செவியகம்

நிறையக் கவிதைகள் புனைந்தும் கலைஞரிடமிருந்து பதவிகளை, பட்டங்களை, பரிசுகளைப் பெற்றோர் பலர். கலைஞரின் அந்தப் பலத்தை பலவீனமாகப் பயன்படுத்திக் கொண்ட போலிகள் பலர் 'அற்ற குளத்து அறுநீர்ப்பறவை'களாக மாறி எதிர்க் குளத்தின் கரையில் அமர்ந்துகொண்டு இழிமொழிகளை வீசிக்கொண்டிருப்பது எதனைக் காட்டுகின்றது?

கலைஞரின் பலமே அவரது பலவீனம் என்பதைத் தானே! அதனால் தானே,

'செய்திப் படங்களில்கூடக் கலைஞர் உருவம் கண்டு மரியாதை செய்கிறவன் நான்; அவர் குரலெடுத்துப் பிறிதொருவர் பேசுகிற போதுகூட மௌனமாக என் நினைவுகளை சிறையிடுகிறவன் நான்; காரணம், இந்த இனத்தின் இரட்சகர் என்பது கால தேவனின் கட்டளைப் பிரகடனம்' என்று எழுதும் ஒருவரால்கூட இப்போது நேர் எதிர்மாறாக எழுதவும், வசைமொழியில் இறங்கவும் முடிகிறது. ஆனாலும் என் போன்றவர்கள் ஆளுகின்ற காலத்தில் அருகில் வராதவர்கள்;

என்றாலும்

**'பலபத்து ஆண்டுகளாய் பாதையினை மாற்றாமல்**
**நிற்கின்ற காரணத்தால் நேர்மை உணர்ந்தவர்கள்**

எனவே

**மணிவிழாக் காணும் மாண்புறு கலைஞர்**
**தமிழகம் கண்ட தனிப்பெருந் தலைவர்;**
**போலிகள் போகலாம்; போற்றலாம்; தூற்றலாம்;**
**வேலிகள் நாங்கள்; தொலைவிலே நிற்பினும்**
**கலைஞர் பெருமையை ஞாலத்திற் குணர்த்துவோம்;**
**அவர் புகழ் வாழ்த்தி அகமகிழ் வுறுவோம்; வாழ்க**

# சமத்துவத்துக்குச் சரியான வழி

**(தலைவர் கலைஞர் அவர்களின் மணிவிழாவுக்காக திரு.இளமுருகு பொற்செல்வி அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க எழுதப்பட்டது)**

கலைஞர் சட்டமன்றத்தில் பணியாற்றிய போது எதிர்க் கட்சி வரிசையில் இருந்து கூர்மையான வினாக்களைத் தொடுத்ததுண்டு. ஆளுங்கட்சி வரிசையில் இருந்தபோது அறிவுத்தெளிவோடும், கூர்மையோடும், கிண்டலாகவும் விடை சொன்னதுண்டு. சில நேரம் எதிர்க்கட்சியினர் சூடாக வாங்கிக் கட்டிக் கொண்டதும் உண்டு.

## கலைஞரின் கூர்மையான தருக்கம் -

முன்னவர் தம் பேச்சுகளைக் கொண்டே தன் கருத்தை அழகுற வெளிப்படுத்தும் திறம் ஆகியவற்றுக்கு எடுத்துக் காட்டாக ஒரு நிகழ்ச்சியை விரித்துரைப்போம்.

பாரதியார் நூற்றாண்டு விழாவை ஒட்டி மதுரையில் உள்ள விக்டோரியா எட்வர்டு மன்றத்தில் நூற்றாண்டு விழா நடைபெற்றது. இப்போது ரீகல் திரையரங்கமாகவும் செயற் பட்டு வரும் இந்த மன்றத்தில் - மனமகிழ் மன்றத்தில் உள்ள உறுப்பினர்களில் பாதிப்பேர் பிராமண அன்பர்கள். ஒரு காலத்தில் பிராமணரல்லாதார் யாரும் இதில் உறுப்பினரே

ஆக முடியாதநிலை. மெல்ல மெல்ல நம் அன்பர்கள் நுழைந்து இடம்பிடிக்க வேண்டியிருந்தது. தமிழ் வளர்த்த மதுரையில் நடுவில் உள்ள ஒரு மன்றத்தில் கூடத் தமிழர்கள் 'நுழைய வேண்டிய நிலை இருப்பதை வெட்கத்துடன் எண்ணிப்பார்க்கவும்.

விழாக்குழுவினர் திரு. நெடுமாறன், அமைச்சர் காளி முத்து ஆகியோரை வெவ்வேறு நாட்களில் அழைத்திருந்த னர். டாக்டர் கலைஞர் பாட்டரங்கிற்குத் தலைமை தாங்குவ தாக இருந்தது. கவிஞர்கள் உரிய கவிதைகளுடன் வந்துவிட் டனர். கலைஞரின் இருபத்தைந்து ஆண்டு காலச் சட்டமன் றப் பணியைப் பாராட்டும் விழாவும் அன்று மதுரையில் இருந்தது. மேலும் கலைஞர் தில்லி சென்று விட்டு அன்று தான் மதுரை வந்திருந்தார். கவிதைத் தலைப்புகள், பாடும் கவிஞர்கள் பற்றிய செய்திகள் தக்க நேரத்தில் அவர்கட்கு அறிவிக்கப்படாததாலும் பரபரப்பு மிக்க பயணங்களாலும் அவரால் தலைமைக் கவிதையை உருவாக்க முடியவில்லை.

## தக்க ஏற்பாட்டுடன்

'கவியரங்குக்குத் தக்க பாட்டுடன் நான் வரவில்லை' என்று அவரே குறிப்பிட்டார். எனவே அவர் பாரதி பற்றி உரை நிகழ்த்துவதாக ஏற்பாடாகியது. காலை 11 மணிக்கு இந்த முடிவு மேற்கொள்ளப் பட்டவுடன் பாட்டரங்குக்கு நான் தலைமை ஏற்றேன்.

நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சிக்கிடையில் ஒருவரது பேச்சில் பாரதியாரின் வாழ்க்கை நிகழ்ச்சி ஒன்று எடுத்துக் காட்டப்பட்டது.

பாரதியார் சாதி சமய வேறுபாடு பார்க்காதவர்.

**'படரும் சாதிப் படைக்கு மருந்து**
**மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்'**

என்று பாவேந்தரே பாராட்டுகிறார்.

தம் வாழ்நாளில் அவர் தொடர்பு கொண்ட ஆட்களிடம் அவர் வேறுபாடில்லாத போக்கையே மேற்கொண்டார். ப.கனகலிங்கம் எனும் அரிசனச் சிறுவனுக்குப் பூணூல் மாட்டிவிட்டு, அதற்குரிய முறைப்படி மந்திரங்கள் ஓதி அவனைப் பிராமணருக்குச் சமானமாக்கிய பெருமை பாரதி யாரைச் சாரும். ஏழை அரிசனச் சிறுவனைக்கூட மேல் சாதிக்காரனாக மாற்றிவிட வேண்டும் என்று முனைந்த பாரதியாரின் துணிச்சலைப் பாராட்ட வேண்டும். ஆனால் பாரதியார் நூற்றாண்டு விழாவில் முன்னின்றும், பின்னின் றும் செயற்பட்ட பிராமண அன்பர்கள் பாரதியாரின் இத்த கைய சமத்துவ முயற்சி குறித்து என்றைக்காவது சிந்தித்த துண்டா? ஒருவேளை மறந்துவிட்டாலும் நினைவூட்டப்ப டும் போது ஏற்றுச் செயலாற்ற வேண்டும் எனும் எண்ணமா வது கொண்டதுண்டா?

ஒவ்வோர் அரிசனச் சிறுவனும் பூணூல் போட்டுக் கொண்டால் எல்லாரும் சமமாகி விடுவோம் எனும் கருத்து நடைமுறைக்கு ஒத்துவருமா? பூணூல் போட்டு விடுவதா லேயே பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட ஒருவனைப் பிரா மண வரிசையில் ஏற்றுக்கொள்ள முடியும் என்று பிராமண அன்பர்கள் ஒப்புக் கொண்டார்களா?

பூணூல் போட்டுக் கொண்டு பிற்படுத்தப்பட்ட ஒருவர் 'பிராமணன்' ஆனதும் மற்ற பிராமணர்கள் எல்லாம் கொள் வினை - கொடுப்பினைகளில் (மண உறவுகளில்) வேறுபாடு பார்க்காமல் நடந்து கொள்வார்களா? ப.கனகலிங்கம் வீட்டி லேயே உறவு கொள்ளவும், அவர் வீட்டில் மண உறவு கொள்ளவும் பிராமண சமூகம் முன்வந்ததுண்டா? சூத்திரன் பூணூல் போட்டுக் கொண்டால் என்ன ஆகும்? 'கம்மியர்' தொழில் செய்யும் கம்மாளர்கள் பூணூல் போட்டுக் கொண்டி ருக்கிறார்கள். ஆச்சாரிகள் என்று பெயரை வைத்துக் கொண் டனர். பிராமணர்கள் இவர்களை எல்லாம் அரவணைத்துக்

கொண்டார்களா? ஒருசமயம் சாத்தூர், சிவகாசிப் பகுதியில் உள்ள நாடார் சமூகத்தினர் கூட்டாகப் பூணூல் போட்டுக் கொண்டார்கள். அப்படிப் போட்டும் அவர்கள் பிராமணர்கள் ஆகிவிடவில்லை. பிராமணர்கள்தாம் ஏற்கனவே நான்கு பிரிவுகள் உருவாக்கி வைத்துள்ளார்களே! அந்த வகையில் நாடார் சமூகத்தினர் பூணூல் போட்டுக் கொண்டதும் 'க்ஷத்திரியர்' என்றுதான் பெயர் வைத்துக்கொள்ள முடிந்ததேதவிர, பிராமணர் எனும் முதல் வகுப்பில் போய் உட்கார முடியவில்லை. அதுசரி, மன்னர் மரபினர்க்குரிய 'க்ஷத்திரியர்' எனும் பெயர் வாணிக மரபினராகிய நாடார் சமூகத்தினருக்கு எப்படிப் பொருந்தும்? தமிழ் வழங்கும் 'வாணிகர்' எனும் பிரிவாக வாழ்வதைவிட, பிராமணர் வழங்கும் 'க்ஷத்திரியர்' ஆகிவிட்டால், அதற்காகப் பூணூலையும் மாட்டிவிட்டால் பிராமணருக்கு அடுத்தாவது வந்துவிட முடியும் என்று அவர்கள் நினைக்கிறார்களா? விருதுநகர் போன்ற இடங்களில் 'க்ஷத்திரிய வித்தியா சாலை'களை உருவாக்கினர். அருப்புக்கோட்டையில் உள்ள கல்லூரியேகூட 'சைவபானு க்ஷத்திரிய கல்லூரி'தான்.

இவ்வளவு செய்த பின்னும் பிராமணர்கள் இவர்களைச் சமமாக நடத்துகிறார்களா? சிந்திக்க வேண்டும்.

இதை நம்பி ஆயிரவைசிய மஞ்சப்புத்தூர் செட்டியார்களும் பூணூல் அணிந்து கொண்டனர். அவர்கள் வைசியராக முடிந்ததே தவிரப் பிராமணர்களாக முடியவில்லையே!

பலர் பூணூல் போட்டும் எந்தப் பிராமணரும் அவர்களுடன் மண உறவோ, நட்புறவோ கொள்ளவில்லையே! அப்படி நாடார் சமூகத்தினர், செட்டியார் சமூகத்தினர், கம்மாளர் சமூகத்தினர் யாரும் பிராமணர்கள் ஆகியிருந்தால் பாரதியார் செய்த முயற்சி பலனளித்துவிட்டது என்றே கூறலாம். அதையே மேற்கொண்டிருக்கலாம். அதுவும் திடீரென்று 'சமபந்திப் போசனம்' என்று போட்டுப் பலரும் கலந்

துண்ணும் நிகழ்ச்சியை நடத்திப் படமெடுத்துக் கொண்ட பிறகு அவரவரும் அவரவர் 'சாதி' வேலையைக் கவனிக்கப் போவதுபோல, பாரதி நூற்றாண்டு விழாவின்போது விழா வுக்கு வருகிறவர்கள் அனைவருக்கும் பூணூல் மாட்டி மந்தி ரம் ஓதி, ஆகம ஆணை பிறப்பித்தும் பிராமணர் ஆக்கியிருக்க லாமே!

ஏன் அதைச் செய்யவில்லை?

நாம் பூணூல் அணிந்து கொண்டாலும் புதுக்கோலம் புனைந்து கொண்டாலும் நமக்குள் நாமே உயர்ந்தவர்கள் - மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் எனும் போக்கைத்தான் உரு வாக்க முடியுமே தவிர எவரும் சமமாகிவிட முடியாது. பூணூல் அணிந்து கொண்டதால் ஒருவன் தன்னைச் க்ஷத்திரிய னாக, வைசியனாக உயர்த்திக் கொண்டு, பூணூல் அணியாத தன் உடன்பிறப்பைச் சூத்திரனாகவே விட்டுவிட்டுப் போக லாம். அவ்வளவுதான்.

எனவே, மேற்கூறிய கருத்துக்களிலிருந்து சில முடிவுக ளைக் காணலாம். கனகலிங்கத்துக்குப் பூணூல் மாட்டிய நிகழ்ச்சி பாரதியின் தூய உணர்ச்சியைக் காட்டுவதே தவிர நடைமுறைக்கு வரமுடியாதது. அப்படிப் பலர் முயன்றும், கூட்டாக முயன்றும் அவர்கள் சமத்துவத்தைக் காண முடிய வில்லை. அப்படியானால் சமத்துவம் எப்போதுதான் வரும்?

கலைஞர் இந்தக் கருத்துக்களை மனத்திற் கொண்டும், சுட்டிக்காட்டியும் தன் கருத்தைத் தெரிவித்தார்.

'நூற்றுக்கு தொன்னூற்றேழு பேராக இருக்கிறவர்களுக் குப் பூணூல் மாட்டி அவர்களை எல்லாம் பிராமணர்கள் அளவுக்கு உயர்த்திச் சமத்துவம் காணுவது என்பது நடக்க முடியாததொன்று; நடைமுறையில் அது வெற்றியடைய வில்லை. அதைவிடச் சுருக்கு வழியும், உடனடியாக நடக்கக் கூடியதும், பாரதியாரின் சீர்திருத்த உணர்வைப் போற்றக்

கூடியதுமான ஒரு வழியுண்டு. அந்த வழி இதுதான். 97 பேரை மாற்றுவதைவிட மூன்று பேர் தங்களை மாற்றிக் கொண்டால் சமத்துவம் வந்துவிடும். மூன்று பேராக உள்ள பிராமணர்கள் தாங்கள் அணிந்துள்ள பூணூலைக் கலைந்து விட்டால் போதும். அனைவரும் சமமாகிவிடலாம்' என்று கலைஞர் குறிப்பிட்டார்.

இந்தக் கருத்தைக் கேட்டதும் கூட்டத்திற்கு வந்திருந்த பல நூற்றுக்கணக்கானவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர். கலைஞரின் இந்தத் தருக்கத்தில் உள்ள பொருத் தத்தை அறிந்து பாராட்டினர். ஆனால் கூட்டத்தில் சிலரது முகங்களில் ஈயாடவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

கலைஞரின் இந்தக் கருத்து ஏற்கத்தக்கதா? நடை முறைக்கு ஏற்றதா? என்றால் 'ஆம்' என்றே விடை கூறவேண்டும்.

பிரம்மாவின் முகத்தில் இருந்து பிறந்ததாகக் கருதிக் கொள்ளும் பிராமணர்கள் உணவு முறையில் சைவக் கொள் கையை விட்டுவிட வேண்டியதில்லை. வழக்கமான பூசனை முறைகளைக்கூட விடவேண்டியதில்லை. மண உறவுகளைக் கூட எப்படியோ வைத்துக்கொள்ளட்டும். காலம் கனிந்து கனிந்து கலப்பு மணங்கள் பெருகப் பெருக அதற்கொரு முடிவு வரட்டும்.

ஆனால் புறத்தோற்றத்தில் மற்ற மக்களிடமிருந்து தங் களை வேறுபடுத்திக் காட்டும் பூணூலை விட்டுவிடுவதால் ஒருவகைச் சமத்துவத்தைக் கொண்டுவர முடியுமா? 'பாரதி எங்களவாள்' என்று பெருமைப்படும் பிராமணர்கள், பின் னால் இருந்துகொண்டு தமிழக அரசினை பலகோடிப் பணத் தைச் செலவிட வைத்தவர்கள் பாரதியாரின் போக்கிலேயே போய் மறுமலர்ச்சி காணவேண்டாமா?

கனகலிங்கங்களை மாற்ற முனைவதைவிட மூன்று பேர் முனைந்து பூணூலை அகற்றிவிட்டுப் பாரதிக்குப் புதுப்பொருள் காட்டலாமே! கலைஞரின் இந்தக் கருத்து எவ்வளவு ஆழமானது என்பதை அனைவரும் சிந்திக்கவேண்டும்.

ஆனால் நாம் சிந்தித்து என்ன பயன்? பிராமண சமூகம் அல்லவா இதைச் சிந்திக்கவேண்டும். கூட்டத்துக்கு வருகை தந்திருந்த பிராமணர்கள் எல்லாம் நன்கு படித்தவர்கள். அவர்கள் சிந்தித்திருப்பார்களே என்று கேட்கலாம்.

ஆம்! அவர்கள் சிந்தித்தார்கள். ஆழமாகவே சிந்தித்தார்கள். கூடிக் கூடிக் கலந்து கலந்து சிந்தித்தார்கள். அதன் விளைவு அடுத்த நாளே மறுமலர்ச்சி காணத்துடித்தனர்.

விழா முடிந்ததும் நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்தில் பிராமண உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து கலைஞரின் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். கலைஞர் அப்படிப் பேசியதற்காக, ஏற்பாடு செய்த செயலாளர் (தமிழர்) வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று ஒரு குரலில் ஓங்கி முழங்கினர். தங்களைப் பெரிதும் புண்படுத்தி விட்டதாகப் புலம்பி நொந்தனர்.

இதுதான் பிராமணர்கள் சிந்தித்ததின் விளைவு!

**கருத்துக்களைக் கூறுவதில் அங்கதமும்**
**இடம் நோக்கி ஏற்றவாறு கூறுவதில் கூர்மையும்**
படைத்த கலைஞர் பன்நூறாண்டுகள் வாழ்ந்து, முடமாகிப் போய்க் கிடக்கும் மூடத் தமிழர்களைக் கடைத் தேற்றட்டும்!

# ‘குறளோவியம்’ - வெளியீடு

*(தலைவர் கலைஞர் அவர்கள் எழுதிய குறளோவியக் கட்டுரைகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு முழு நூலாக வெளியிடப்பட்டது சென்னைப் பாரதி பதிப்பகத்தாரால். அதன் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு பேசும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. 20 மணித்துளிகள் பேசி இருந்தாலும் என் பேச்சின் ஒரு பகுதியாகக் ‘குறளோவியம்’ இரண்டாம் பதிப்பில் இடம் பெற்ற சில வரிகள் மட்டும் இங்கே தரப்படுகின்றன.)*

கலைஞர் அமைத்த வள்ளுவர் கோட்டம் நெடுங்காலம் நிலைத்து நிற்குமா? குறளோவியம் நிலைத்து நிற்குமா? என்று ஒரு பட்டிமன்றம் வைத்தால் நான் குறளோவியத்தின் பக்கம் தான் பேசுவேன். ஏனென்றால் கட்டடங்கள் என்ற முறையில் அவை ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால் சற்றுத் தளர்வு பெறலாம். ஆனால் ஒரு இலக்கியம் என்ற முறையில் ஓர் இலக்கிய கர்த்தா பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கிக் கொடுத்த கருத்துக்களுக்கு இப்படி ஓர் ஓவியத்தை இதுவரையில் எந்தத் தமிழறிஞனும் எழுதியதில்லை என்பதுதான் உண்மை.

திருக்குறளுக்கு நூற்றுக்கு மேற்பட்டவர்கள் குறிப்புகள், உரைகள் வரைந்திருந்தாலும் ஒவ்வொருவருடைய நெஞ்சத்திலும் பதியுமாறு முற்றிலும் புதிய உத்தியைக் கையாண்ட ஒரே தலைவன் கலைஞர் மட்டும் தான்.

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் திருக்குறள் பாடமாக வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மாணவர்கள் அதைப் பொருட்படுத்துவதே இல்லை. அது திருக்குறளின் குற்ற மல்ல; ஒவ்வொரு மாணவனுடைய உள்ளத்திலும் அதைப் பதிய வைக்கின்ற உத்தியை எந்தக் கல்வித் துறையும் கையாளாதது ஒரு குற்றம்.

ஆனால் இனிமேல் திருக்குறளை வெறும் குறள் பாட மாக வைப்பதைவிட இந்தக் குறளோவியத்திலிருந்து நான்கு காதைகளைப் பாடமாக வைத்தால் அது பதிவதைப் போல வேறு எவனுக்கும் எதுவும் பதியாது என்பதை என்னால் ஒரு ஆசிரியன் என்ற முறையில் உறுதியாகச் சொல்ல முடியும்.

பாடக் குழுவிலே இருக்கின்ற அறிஞர்கள் அரசியல் வேறுபாடுகளைப் பற்றிக் கவலைப்படாமல் உள்ளபடியே அவர்கள் வள்ளுவர் கூறுகிற நடுநிலை உணர்வு படைத்தவர் களாக இருப்பார்களேயானால் உள்ளபடியே வள்ளுவர் கூறு கிற செய்நன்றி உணர்வு இருக்குமேயானால் அவர்கள் இதைப் பாடமாக வைக்கவேண்டும்.

# மனமுவந்து வரவேற்போம்!

*(10.4.86 அன்று மதுரை யாதவர் கல்லூரிக்கு 'விருந்து' எனும் தலைப்பில் இலக்கிய உரையாற்றத் தலைவர் கலைஞர் அவர்கள் வந்தபோது அக்கல்லூரியின் முதல்வராக இருந்து ஆற்றிய வரவேற்புரை இது.)*

**தென்னவளே! பாரிற் சிறந்தவளே! என்றுமே**
**என்னவளே! நெஞ்சில் இனிக்கும் தமிழ் என்னும்**
**பெண்ணவளே கூப்புகிறேன் கை.**

**செய்வதெல்லாம் செய்; எங்களைச்**
**சிக்கலுக்குள் ஆளாக்காமல் செய் - என்று**
**உரிமை கொடுத்து, உணர்வுக்கு மதிப்பளித்து, இந்தக்**
**கல்லூரியின் உயர்வுக்கு உழைக்க வாய்ப்பளித்த**
**தலைவர், தாளாளர், மற்றும் ஆட்சிக்குழு,**
**செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களே!**
**நகர முழுவதிலுமிருந்து வந்து நாற்றிசையிலும்**
**நெருக்கி நிற்கின்ற**
**நன்னெஞ்சு படைத்த பெருமக்களே!**
**ஆசிரியப் பெருமக்களே!**
**என் அலுவல் துணையாய் அல்லும் பகலும்**
**உழைக்கும் அலுவலர்களே!**

என்உயிரின் அணுவாகி
உணர்வின் பிழிவாகி
தெளிந்த மலரோடைத்
தேனின் கசிவாகி
இன்று உருகி நிற்கும் மாணவச் செல்வங்களே!

உங்கள் அனைவரையும் யாதவர் கல்லூரியின்
சார்பில் வரவேற்கின்றேன்!
ஓ! நான் மட்டும் வரவேற்க வந்தவனா?
உங்களையா?
அதுவும் உறவில் விரிசல் இல்லாத நமக்குள்ளே
ஒருவர்க்கொருவர் வரவேற்பா?
இல்லை நாம் அனைவருமே வரவேற்புப்
பாட வந்திருக்கிறோம்!
நாடே வரவேற்று நாளும் மகிழ்ந்து
கொண்டிருக்கும் வேளையில்
கூட இருக்கும் நாம் கும்பிட்டு வரவேற்போம்!
அதுவும், தங்கப் பட்டயத்தில் தங்குகின்ற நன் மணியை!
உயர்ந்ததோர் கோபுரத்தின் உச்சிக் கலசத்தை!
சங்கத்தமிழழகைச் சாற்றும் போதெல்லாம்
பொங்கிப் பெருக்கெடுத்துப் புனல்வற்றா வெள்ளத்தை!
ஊற்றுக் குறையாத உண்மை அறிஞனை
மாற்றுக் குறையாத மாணிக்கப் பேழையை!
ஏற்று வரவேற்போம்! எல்லோரும் வரவேற்போம்!

இது பாலை மண்! - அல்ல
திருவளர்கின்ற பாலை - திருப்பாலை மண்.
பிரிவையே பெரிதும் பேசித்
தலைவன் தலைவிக்குள் பெரும் பாசம் விளைத்துவிடும்
பாலை மண்!
ஊர் விட்டுப் போனாலும் யார் விட்டுப் போனாலும்

(உன்னை யார்விட்டுப் போனாலும்)
உடன்போக்கில் எல்லாம் உன் உடன் இருக்கும்
வாய்ப்பளிக்கும்
பாலை மண்!
இந்தப் பாலை மண் கல்லூரி பாங்குடன் வளர
ஓரிலட்சம் உருபாயை உவந்து கொடுத்தாயே!
மறக்கவில்லை நான்!
60 விழுக்காடு வாங்கினால்தான் உதவித் தொகை
கிடைக்கும் எனும்
உச்சக் கட்டச் சட்டத்தை ஒரு நொடியில் தூக்கிவிட்டு
40 விழுக்காடு வாங்கும் மாணவர்கள் -
(பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட)
அனைவரும் உதவித் தொகை பெறலாம்
எனும் அறிவிப்பைச் செய்த உன்னை
மாணவர் உலகம் மறக்கவே மறக்காது!
அந்த அறிவிப்பை நீ இந்த மண்ணில்தான்
செய்தாய் என்பதை
வரலாறு மறக்காது! நானும் மறக்கவில்லை!
வரலாற்றுப் பெட்டகமே! உன்னை வருங்காலம் மறக்காது
பொலிவுமிக்க பூம்புகார் படைத்தாய்!
கட்டப் பொம்மனைக்கோட்டையில் அமைத்தாய்!

வள்ளுவர் சிறக்கக் கோட்டமும் அமைத்தாய்!
உண்மை. வரலாறு உன்னை மறக்காது!
மறக்காது! ஆனால் மறைக்கும்!
அது தற்காலிகமாக மறைக்கும்!
காரிருள் கதிரவனை மறைப்பதுபோல!
இன்று நீ பங்குகொள்வது நிறைவு விழா!
உனக்கு நிறைவு ஏற்பட்டிருக்கும் வேளையில் நிகழும் விழா!
இது நிறைவான விழா!

தானைத் தலைவனே! என் காதல் தலைவனே!
இந்த மண்ணில் இது முதல் வரவேற்பா? - இல்லை
ஐந்தாம் முறையாக அழைத்து வந்த வரவேற்பு!
நாற்பது ஏக்கர் நிலத்தை நன்கொடையாகக்
கொடுத்த அறிஞர் அண்ணாவின் வழிநின்று
அறுபத்திஒன்பதில் நீ அடிக்கல் நாட்டினாய்;
அன்று நீ நாட்டியது கல்!
இன்று நாங்கள் காட்டுவது சோலைசூழ்ந்த கட்டிடங்கள்!
உன் கைராசிதான் அது - என்று
புராணிகனாக நின்று புளுகமாட்டேன்
வாரி வழங்கும் பாரி போல் நின்று
உன் மனத்தை நாட்டினாய்; - தொடர்ந்து
பணத்தை நீட்டினாய்; அவற்றை ஏற்று
உன்முன் வளத்தைக் காட்டினோம்.
சில கட்டிடங்கள் சிலிர்த்தெழுந்து நிற்குங்கால்
1972-இல் அவற்றைத் திறந்து வைக்க நீ வந்தாய்;
ஒரு கல்லூரி உருவாகிறது என்று பெருமிதம் கொண்டாய்
1974-இல் பிற்படுத்தப்பட்டோர் மாநாடு இந்த மண்ணில்
நடந்தபோது
நாடு மறக்காத ஓர் அறிவிப்பை
நாமணக்கக் கூறிய நாள் அது!
(40 விழுக்காட்டுக்கும் உதவித் தொகை)
1979-இல் நான் முதல்வரான முதல் கட்டத்தில்
கல்லூரிப் பேரவையைத் தொடங்கி வைக்க வருகை தந்தாய்!
தமிழ்க்குடிமகனையே தலைப்பாக்கிய விழா அது!
இன்று 10.4.86
இலக்கிய விருந்து - எங்கள் மனக் கோட்டம்
தீர்க்கும் மருந்து
எனவே இது முதல் வரவேற்பா? - இல்லை
ஆனால் -
இது முதல்தர வரவேற்பு

உன் மீது மாறாத பற்றும் பாசமும் கொண்ட
   தம்பியின் வரவேற்பு
கோலோச்சும் மன்னவனே!
   உனக்குக் குடிமகன் தரும் வரவேற்பு!
ஆண்டவனே! எம்மை ஆண்டவனே!
உன் பக்தனல்ல நான்;
   உன் பக்கத்தவன்; அவன் தரும் வரவேற்பு - இது;

இது ஒரு முதல்வர் வரவேற்பு!
   ஆம்! முதல்வர் வரவேற்பு!
இது நான்காம் வேற்றுமைத் தொகையாக அமைந்திருந்தால்
   இந்த நாடு மகிழும் - எனினும்
   அது நாளை நிகழும்
ஆனால் நீ இங்கு வருவது ஐந்தாம் முறை என்பதனால்
   இது ஐந்தாம் வேற்றுமைத் தொகையாக
   அமைந்துவிட்ட வரவேற்பு!
உன் காலைத் தொட்டு வரவேற்கலாம்!
   ஆனால், நீ களிப்பதற்கு மாறாகக் கனல் கக்கி விடுவாயே!
பெரியாரும் அண்ணாவும் பேணி வளர்த்த தன்மானத்தை
இப்படியா வீணாக்கி இழிவு படுத்திவிட்டாய் என்று
   நீ கண்டிப்பாய்! என்னைத் தண்டிப்பாய்!
எனவே நான் அப்படிச் செய்யமாட்டேன்!
பகுத்தறிவுச் சிந்தனையும் மார்க்சியச் சிந்தனையும்
பாடமாக வைத்துள்ள கல்லூரி
   தமிழ்நாட்டிலேயே யாதவர் கல்லூரி ஒன்றுதான்!
எனவே நான் காலில் விழமாட்டேன்!
அதனால், உன் கைகளைப் பிடித்துக் கண்களில்
ஒற்றிக்கொண்டு
   வரவேற்கின்றேன்!
   அதுவும் எந்தக் கை?

தேர்தல் காலத்தில் மட்டும் தெரியும் கையல்ல!
அது, கனல் கக்கும் உரையாடலை அள்ளி வீசி
நாட்டுமக்களைக் கிறுகிறுக்க வைத்த கை!
நூறு உரை வந்தாலும் உனக்கு மேல்
யாருரையும் நிற்காது என்று
ஓவியமும், காவியமும் சேர்த்தளித்த
குறளோவியக்கை!
சங்கத் தமிழைத் தரணியெல்லாம் படித்தறிந்து
பொங்கித் ததும்பும் பூரிப்பைத் தந்திடும் கை!
அந்தக் கைகளைப் பற்றிக் கனிவுடன் வரவேற்கின்றேன்!
மறக்கவில்லை நாங்கள்! நன்றி மறக்கவில்லை நாங்கள்!
நீ நெடுநேரம் பேச வேண்டும் என்பதையும்
மறக்கவில்லை நான்!
நீ ஏழாண்டுகட்கு முன் வந்த போது
என் வரவேற்புரையில் உள்ளது இது
'இந்த மண் உன் சொந்த மண்
நீ வித்துகளை இடலாம்;
நாங்கள் விளைவாக்கித் தருகிறோம்!' என்றேன்
விளைவைச் சொன்னால் வியந்துபோவாய்!
இங்கு தமிழ் இளங்கலை படித்து, தமிழ் முதுகலையும் படித்து
எங்கள் மாணவன் பாலகிருட்டிணன்
இந்திய ஆட்சிப் பணித்தேர்வில் வெற்றி பெற்றான்.
தமிழில் முதுகலை படித்தவன் - அதுவும் தமிழிலேயே
தேர்வு எழுதி இ.ஆ.ப. ஆனவன்!
இந்திய வரலாற்றில் இதுதான் முதல் என்பேன்!
நீ நாட்டிய கல்லூரி காட்டிய திறம் என்பேன்!
இட்ட வித்தின் இணையற்ற விளைவென்பேன்!

நீ, முதல்வராக இருந்தபோது
உன்னைப் பாடியோர் பலர்.
உன்முன் ஆடியோர் பலர்,

உதவி நாடியோர் பலர்
ஆனால் உண்மையில்லாத சிலர்
அதில் ஒளிந்து கொண்டிருந்ததை
உன் பெருந்தன்மை காரணமாக வேறு
பிரித்துப் பார்க்கவில்லை நீ.
அற்ற குளத்து அறுநீர்ப் பறவைபோல்
பழுமரம் தேடிச் செல்லும் பறவைகளைப் போல் பலர்
தடம்மாறி - தடுமாறி - கிளைமாறி அமர்ந்திருக்கலாம்.
பலபத்து ஆண்டுகளாய்ப் பாதையினை மாற்றாமல்
நிற்கின்றேன்; அதனால் நின்னருகில் நிற்கிறேன்.
நின்று வரவேற்கின்றேன்.
நீ திட்டமிட்டு உருவாக்கிய
வள்ளுவர் கோட்டத்தில்
உன் பெயரே இல்லை!
அரசியல் புகுந்து,
உண்மை வரலாற்றை ஊருக்குமறைக்கிறது!
உன் கண்முன்னாலேயே உன் பெயர் விடப்படுகிறது!
நீ கட்டிய கோட்டத்தில் இந்த நிலை!
ஆனால், நீ கல் நாட்டிய இந்த மண்ணில் என்றும்
உன் பெயரிருக்கும்.

தன்னேரில்லாத தானைத் தலைவனே!
நான் எனக்குரிய எல்லையைத் தாண்டிவிட்டேனா!
என்னை மன்னித்துவிடு!
உன்பால் உள்ள அன்பால் இந்த உளறல் என்று ஒதுக்கிவிடு!
இல்லை! ஒருவேளை உன் பழைய நினைவுகளைத்
தூண்டிவிட்டேனா?

ஆம் எனில், ஏங்கித் தவிக்கும் எங்களுக்கு ஆறுதல்கொடு
உன்னைத் தாங்கிப் பிடிக்கும் தமிழ்ச்சமுதாயத்துக்கு
ஒரு மாறுதல் கொடு!
இன்று தூங்கித் திளைக்கும் தமிழர்களுக்கு
ஒரு சொடுக்குக் கொடு!

அது தமிழடியாக இருக்கட்டும்! - சங்கத்
தமிழ் அடியாகவே இருக்கட்டும் - அது
குறுக்கடியாக இருக்கட்டும் - அதுவும்
குறளடியாகவே இருக்கட்டும்.

நெருக்கடி காலத்திலும் தளராமல் நிமிர்ந்து நின்றவனே! உன்
தருக்க அடியால் இந்தமண் மீண்டும் பொலிவு பெறட்டும்!
காத்திருக்கிறோம் உனக்காக! நீ வருவாய்
என்ற நம்பிக்கையில்!
அதனால், காத்திருக்கிறோம் இமையாக!
பொற்காலம் தருவாய் என்ற நம்பிக்கையில்!
இன்றும் காத்திருக்கிறோம் உனக்காக! தருவாய்
காலம் வெல்லும் சரக்காக!

# 'குறளோவியம்' இரண்டாம் பதிப்பு

**'குறளோவியம்'** நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு பலருள் ஒருவனாக நான் உரையாற்றியிருந்தேன். **'குறளோவியம்'** முதற்பதிப்பு விற்றுத் தீர்ந்து இரண்டாம் பதிப்பு வெளியானபோது சேலம் மாவட்டத் தி.மு.கழக மும், பாரதி பதிப்பகமும் இணைந்து சேலத்தில் வெளியீட்டு விழா நிகழ்ச்சியை நடத்தின. முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் தலைமையில் நான் நூலை வெளியிட்டு உரையாற்றினேன். இதில் எனக்குப் பதவி உயர்வு. இந்த உயர்வு பின்னாளில் என்னைச் சட்டப் பேரவைத் தலைவராக்கப் போகிறது என்று கனவுகூடக் கண்டிருக்க மாட்டேன். அதில் தலைவர் கலைஞர் அவர்கள் என்னைக் குறித்துப் பேசிய சில வரிகள் என் எளிய தோற்றத் துக்குப் பாராட்டுத் தெரிவித்தன.

# 'அந்தமானைப் பாருங்கள்' அணிந்துரை

1985 சனவரியில் பொங்கல் விழாவில் கலந்துகொள்ள அந்தமான் தோழர்கள் அழைத்திருந்தனர். 12.1.85 அன்று சென்னை வந்துவிட்டேன். தமிழர்களைச் சந்திப்பதற்காக அந்தமான் செல்லவிருக்கும் நான் தமிழினத் தலைவரைச் சந்திப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதினேன்.

நான் போன நேரத்தில் தலைவர் கலைஞர் வீட்டில் இல்லை. சந்திக்க முடியாமல் போய்விட்டதே என்று வருத்தம். எனினும் இன்றைய நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் டி.ஆர்.பாலு அந்த வருத்தத்தை ஒரு நொடியில் போக்கினார். என் பேச்சைக் கேட்டு மகிழ்ந்து பழக்கப்பட்ட அவர் என்னை அவருடைய மகிழுந்திலேயே தலைவர் கலைஞர் இருக்குமிடத்துக்கு அழைத்துச் சென்றார். தலைவரை அவருடைய இல்லத்தில் சந்திப்பது இதுவே முதல் தடவை.

1984 தேர்தலுக்குப் பின் ஏற்பட்ட களைப்பு தலைவர் கலைஞருக்கு நாட்டுமக்கள் தந்த தீர்ப்புப் பற்றியும் பேசினோம். அவருடன் பேசியது எனக்கு ஆறுதலாக இருந்தது. என் சந்திப்பும் அவர்க்கு ஒரு சிறு மகிழ்ச்சியையாவது தந்திருக்கும். வழக்கமாக நான் சந்திக்கும் போதெல்லாம் அவர்க்கு ஒரு புதுநூலைத் தருவது உண்டு. அதன்படி அன்று, நான் எழுதி உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடாகக்

கொண்டு வந்த **'பாவாணரும் தனித்தமிழும்'** எனும் நூலைக் கொடுத்தேன். பின் வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டு விடைபெற்றேன்.

பிறகு அந்தமான் சென்று ஒருவாரம் சுற்றுப்பயணம் செய்துவிட்டுக் கல்லூரிக்குத் திரும்பினேன். என் பயணத்தைப் பயன்படுத்தி **'அந்தமானைப் பாருங்கள்'** எனும் பயண நூலை எழுதி முடித்தேன். தலைவர் கலைஞர் அவர்கள் அணிந்துரை வழங்கினால் பெருமிதமாக இருக்கும் என்று கருதினேன். அவர்களிடம் நூல் அளிக்கப்பட்டபோது அவர் சென்னை மத்திய சிறைச்சாலையில் இருந்தார். அந்தமான் சிறைச்சாலையைப் பற்றிய (Cellular Jail) **நூலுக்கு அணிந்துரை எழுதும் தலைவரும் இப்போது சிறைச்சாலையில்! என்ன வியப்பு!**

**அந்தச் சூழ்நிலையில் தலைவர் கலைஞர் அவர்கள் எழுதிய அணிந்துரைதான் இது:**

## அந்தமானைப் பாருங்கள்!

சுற்றுலாப் பயணம் மேற்கொள்வது கண்குளிரக் காட்சிகளைப் பார்த்துக்களிக்க மட்டுமே என்றில்லாமல் அந்தப் பயணத்தைப் பயன்மிக்க செயல்களுக்கும் சிந்தனைகளுக்கும்; மற்றவர்க்கு ஓர் உந்துதலை உருவாக்கிடும் வண்ணம் ஆக்கிக்கொள்ளும் ஆர்வமும் ஆற்றலும் பெற்றிருத்தல் வேண்டும்.

பல்லாயிரக்கணக்கானோர் சுற்றுலா இடங்களுக்குச் செல்கின்றனர். வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்கின்றனர். அவர்களில் விரல்விட்டு எண்ணிச் சுட்டிக்காட்டக் கூடிய சிலர் மட்டுமே தங்களது பயண அனுபவங்களை அலுப்புத் தட்டாத வகையில் நூல்களாக வடித்து வழங்கியுள்ளனர்.

அந்தச் சிலரில் ஒருவராகவும் சிறந்த தமிழ் அறிஞ ராகவும் மதுரை ஆயர் கல்லூரி (யாதவா கல்லூரி) முதல்வராகவும் விளங்குகின்ற முனைவர் தமிழ்க்குடி மகன் அவர்கள் இதோ இந்த அரிய நூலைத் தமிழர்க் குத் தந்துள்ளார்.

பாரதி பதிப்பகத்து நண்பர் சிதம்பரம் இந்த நூலை அழகுற வெளியிட்டுள்ளார்.

**''அந்தமானைப் பாருங்கள்''** என்று நூலுக்குத் தலைப்புத் தந்திருப்பினும் **''அந்தமானைப் படியுங்கள்''** என்ற தலைப்பே இதற்குப் பொருத்த மான தலைப்பாகும்.

**''தமிழ்க்குடிமகன்''** என்ற தலைப்பிலேயே அவர் முதல்வராக இருக்கும் கல்லூரியில் ஒருமுறை உரை யாற்றி இருக்கிறேன். மாணவர் பேரவையினர் அழைத் திருந்தனர். எந்தத் தலைப்பில் பேச வேண்டும் என்று மேடையில் தான் கேட்டேன். எந்தத் தலைப்பில் வேண்டுமாயினும் பேசுங்கள் என்றனர். **''முதல்வர்''** என்ற தலைப்பிலேயே பேசலாமா என ஒரு நொடிப் பொழுது எண்ணினேன்! **''முதல்வர்''** வரும்; போகும்! தமிழ்க்குடிமகன் தான் நிலையானவன். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றி மூத்த குடிமகன். எனவே தமிழ்க்குடிமகன் என்ற தலைப்பி லேயே பேசினேன்.

அந்தமான் தீவுக்குச் சென்னையிலிருந்து கிளம் பிய விபரங்களை அழகுற அடுக்கி, அங்கு சென்றால் தங்குவதற்கு வசதியான விடுதிகள் வரையிலே அவற் றுக்கு இப்போதுள்ள கட்டண விபரங்கள் உட்பட அனைத்தையும் முதற் பகுதியிலே அவர் தொகுத்துக் கூறியிருப்பது வியந்து பாராட்டுதற்குரியது.

**"என்ன செய்துவிடுவாய்? அந்தமானுக்கு அனுப்பி விடுவாயோ?"** என்று மிரட்டுவோரைப் பார்த்து, குக்கிராமங்களில்கூட குப்பனும், சுப்பனும் கேள்வி கேட்ட காலம் ஒன்றிருந்தது.

அத்தனைக் கொடுமை இழைக்கப்படும் இடமாக அந்தத் தீவு ஆங்கிலேயர் காலத்தில் விளங்கியது. இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்ட வீரர்கள் மீது வன்முறைக் குற்றங்களைச் சுமத்தி ஆண்டுக்கணக்கில் - ஏன்; ஆயுட்காலம் வரையிலேகூட - அந்தமானில் உள்ள சிறையிலே போட்டு வாட்டினர். எண்ணிலடங்கா - எண்ணிப் பார்க்கவும் இயலா அக்கொடுமைகளை எல்லாம் தமிழ்க்குடிமகன் அவர்கள் ஆதாரங்களுடன் அடுக்கிக் காட்டும்பொழுது படிப்போர் கண்கள் கலங்கிடும். நான் கலங்கினேன். அந்தத் தியாகிகள் வளர்த்த நெருப்பில் இன்றைக்குக் குளிர்காய்பவர்களையும் குத்திக்காட்ட நூலாசிரியர் தவறவில்லை. வங்காளியர் அறுபதாயிரம் பேர் - தமிழர்கள் ஐம்பதாயிரம் பேர் - இந்தி பேசுவோர் இருபதாயிரம் பேர் - எஞ்சியுள்ளோர் மற்ற மொழிகள் பேசுவோர் - என்று கணக்கிட்டு புள்ளி விபரம் கூறப்படும் இந்த நூலில் அந்தமானில் தமிழுக்குப் புறக்கணிப்பு; தமிழருக்குப் புறக்கணிப்பு என்று சுட்டிக் காட்டும்பொழுது **"அந்தோ தமிழினமே!"** என்று இதயம் துடிக்கத்தான் செய்கிறது.

தென்னைமரம் ஏறித் தேங்காய் பறித்து அதனை உடைத்து உண்ணும் மிகப்பெரிய நண்டுகள் குறித்த செய்திகள் மிகக் குறைந்த அளவினராக ஆனால் இன்னமும் காட்டுமிராண்டிகளாக வாழும் இனத்தவரைப் பற்றிய குறிப்புகள் - சோழ மன்னன் அந்தத் தீவையும் வென்றான் என்ற வரலாற்று உண்மைகள்

இன்று அங்குள்ள நிர்வாக அமைப்பு தொழில் வளம் இயற்கை எழில் வளம் அனைத்தையும் ஒன்று விடாமல் ஆசிரியர் இந்தப் பயண நூலில் குறிப்பிட்டிருப்பது பெரிதும் பாராட்டத்தக்கது.

தமிழ்ப்பற்று - இன உணர்வு - தன்மான உணர்வு - நாட்டுப் பற்று - மக்களின் நல்வாழ்வு - இவற்றின் நிலைக்களனாக உள்ளம் வாய்க்கப்பெற்ற ஒருவர்; தான் மேற்கொண்ட பயணம் குறித்து இப்படித்தான் எழுத முடியும். படிப்போர்க்கு நூலைப் படித்து முடிக் கும் வரையில் கீழே வைப்பதற்கு மனமின்றி ஆர்வம் எழுகின்ற அளவுக்கு எழுதப்படுவதே நூல்! அந்த வரிசையில் இடம் பெறுவது இந்த நூல்!

மாணவர்களுக்கு மெத்தவும் பயன் வழங்கக் கூடியதும் பொதுவாக தமிழ் நாட்டு மக்களுக்கு அந்த மானைப் பற்றிய படம் பிடித்துக் காட்டக் கூடியதும் இந்த நூல் எனில் அது மிகையன்று!

அந்தமான் நூற்றுக்கணக்கான விடுதலை இயக்க வீரர்களின் உயிரைக் குடித்தது மட்டுமல்ல; தன்மான இயக்கத் தளபதி என்னுயிர் நண்பர் ஆசைத்தம்பியின் உயிரையும் குடித்த இடம் என்கிறபோது அத்தீவின் மீது எனக்குள்ள கோபம் இன்னும் அடங்கவில்லை.

அன்புள்ள,
5.12.1986 மு.கருணாநிதி

இந்த நூலில் தன்மானச் சுடர் ஆசைத்தம்பி அவர்களின் மறைவு மற்றும் சிலை அமைப்புக் குறித்து எழுதாது விட்டு விட்டேன். இரண்டாவது பதிப்பில் அதனையும் சேர்த்து சரிசெய்து விட்டேன்.

# ஏன் இந்த எதிர்ப்பு?

**(14.1.87-இல் பொங்கல் விழாவுக்காக எழுதியது)**

தமிழினத் தலைவர் கலைஞரும், இனமானப் பேராசிரியர் அன்பழகனும் மற்றும் 20,000-க்கு மேற்பட்டோரும் மொழிக்காப்புப் போரில் இறங்கி இன்று தமிழகச் சிறைகளில் வாடிக்கொண்டிருக்கும் நேரத்தில் பொங்கல் விழா வருகிறது. தமிழர்கள் கொண்டாடும், கொண்டாட வேண்டிய ஒரே விழா பொங்கல்தான். அதிலும் சாதி, சமய வேறுபாடு கடந்து கொண்டாடப்படும் விழா பொங்கல்.

இந்த ஆண்டுப் பொங்கலை எப்படிக் கொண்டாடுவது? ஒரு பக்கம் ஆயிரமாயிரம் அப்பாவித் தமிழர்கள் அண்டை நாட்டில் கொலைக்கும், சித்திரவதைக்கும் ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். மற்றொரு புறம் இந்தி எதிர்ப்பு மறவர்கள் விழியினும் மேலான மொழிக்கு வரும் தீங்கு தடுக்கச் சிறை புகுந்திருக்கிறார்கள். மொழிக்கும், இனத்துக்கும் நேர்ந்துள்ள தீங்கு கருதி மனம் பொங்கியெழுகிறது, சினம் கொப்பளிக்கிறது.

**'எப்பக்கம் வந்து விடும் - இந்தி**
**எத்தனைப் பட்டாளம் கூட்டிவரும்?**

என்று கேட்ட பாரதிதாசனின் சீற்ற மொழிதான் இப்போதும் நினைவில் ஓடிக் கொண்டிருக்கிறது.

இந்தி எதிர்ப்புப் போர் என்பது ஏதோ அரசியல் இலா பம் கருதித்தான் நடைபெறுகிறது என்று சிலர் வழக்கம் போல் **'சாயம்'** பூசிக் கொண்டிருக்கிறார்கள். இப்போதைய போராட்டத்தை நடத்துவது ஒரு கட்சி என்றாலும் தமிழகத்தின் வாழ்விலும், தாழ்விலும் இடையறாது இணைந்து செல்லும் ஓர் இயக்கத்தின் தொடர்போராட்டம் இது என்பதை வரலாறறிந்தோர் உணர முடியும். முன்பின் வரலாறு எதுவும் அறியாமல் தன்னல வேட்டைக்காக அரசியலில் இறங்கியிருப்போர் வேண்டுமானால் எது வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டிருக்கலாம்.

1937-ஆம் ஆண்டில் - இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்னாலேயே சென்னை மண்டலத்தில் இராசாசியால் இந்தி புகுத்தப்பட்டது. ஆங்கிலேயர்களை எதிர்க்கும் வேலையைத் தலைக்கு மேல் கொண்டிருந்த தமிழர்கட்கு **'இந்தி'**யரையும் எதிர்க்கும் வேலை வலுக்கட்டாயமாக வந்து சேர்ந்தது.

தமிழகத்தில் பிராமணரல்லாதாரின் நலங்காக்க நிறுவப்பட்ட நீதிக்கட்சி சமூக சீர்திருத்தப் பணியையும் செய்து வந்தது. எனினும் நீதிக்கட்சி ஆட்சியைப் பிடித்துச் செயற்படும் அளவுக்கு வாய்ப்பும் பெற்றது. 1937-ல் நீதிக்கட்சி தோல்வியடைந்து காங்கிரசுக் கட்சி ஆட்சிக்கு வந்தவுடனேயே இந்தித் திணிப்பு வேலையும் தொடங்கி விட்டது. இராசாசி தன் காலத்தில் 200 பள்ளிகளில் இந்தியைப் புகுத்த ஏற்பாடு செய்தார். இந்தித் திணிப்பு தமிழ் மக்களால் எதிர்க்கப்பட்டது. தேர்தலைப் பற்றியே கவலைப்படாத பெரியார் இதனை எதிர்த்தார் என்பது மட்டுமன்றி அரசியல் தொடர்பேயில்லாத தமிழ்க்கடல் மறைமலையடிகளும், அன்றைய தமிழ்ப் பேராசிரியர்களான நாவலர் சோமசுந்தர பாரதியார், கா.சுப்பிரமணியப் பிள்ளை ஆகியோரும் வெளிப்படையாக இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரில்

இறங்கினர். ஈழத்துச் சிவானந்த அடிகள், சண்முகானந்த அடிகள் ஆகிய துறவிகளும் இப்போராட்டத்தில் இறங்கினர்.

இவர்கள் எல்லாம் அரசியல்வாதிகளா? மொழியுணர்ச்சி ஒன்று மட்டுமே கருதி இவர்கள் இப்போரில் இறங்கினர் என்றால் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் அரசியல் இலாபம் கருதியது என்பது முட்டாள்தனமான விரோதமல்லவா? என்பதைச் சிந்திக்க வேண்டும். இந்த எதிர்ப்பு ஓரளவு இந்தித் திணிப்பைத் தகர்த்தது என்றாலும் முற்றிலும் தடுத்து விடவில்லை. இந்தி பதுங்கியது மீண்டும் பாய்வதற்காக என்றுதான் சொல்லவேண்டும். 1949-இல் இந்தியா விடுதலையடைந்த பின்னர் **'இந்தியே இந்தியப் பொதுமொழி'** எனும் அரசியலமைப்புப் பட்டயத்தோடு இந்தி உலா வரத் தொடங்கியது. வெறும் சமுதாயச் சீர்திருத்த இயக்கமாக மட்டும் இருந்து சாதிப்பதைவிட அரசியல் இயக்கமாக இருந்து சிறப்பாகப் பணியாற்ற முடியும் எனும் நம்பிக்கையில்தான் தி.மு.கழகம் தோன்றியது அதுவும் 1949-இல் தான்.

1965 சனவரி 26 முதல் இந்தி இந்திய அரசியல் மொழியாக வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருந்தமையால் அதற்கு முந்திய நாளே கிளர்ச்சி தொடங்கப்பட்டது. முதற் போராட்டத்தில் பொதுமக்களும், புலமக்களும் கலந்து கொண்ட நிலை; இந்த இரண்டாவது போராட்டத்தில் பொது மக்களும், மாணவர்களும் கலந்துகொண்டனர். இதில் சின்னச்சாமி முதலாகப் பத்துக்கு மேற்பட்டோர் தீக்குளித்து இறந்தனர். 300-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பக்தவத்சலம் ஆட்சியில் துப்பாக்கிக் குண்டுகட்குப் பலியானார்கள். மிகப் பெரிய உயிரிழப்பையும், கடுமையான சேதத்தையும் உண்டாக்கிய போராட்டமாக இது அமைந்துவிட்டது. இதன் விளைவு 1967-இல் காங்கிரசு ஆட்சி தோல்வியடைந்து அண்ணாவின் ஆட்சி தொடங்கியது.

இந்தித் திணிப்புக்கு ஒரு முடிவு கட்டப்படும் எனும் நம்பிக்கை பிறந்தது. எனினும் 1967 இறுதியில் இந்திய அரசு எடுத்த முடிவுகளின்படி 1968 சனவரி 26-க்குள் இந்திக்கு வலிமையான வாய்ப்பும், மீண்டும் இந்தித் திணிப்பு முயற்சி தொடரும் என்னும் நிலையும் ஏற்பட்டன. 1968 சனவரியில் மாணவர்கள் மீண்டும் கொதித்தெழ வேண்டியதாயிற்று. எனினும் 1968 சனவரி 26-க்கு முன்பே அண்ணா கொண்டு வந்த **'இருமொழிச் சட்டம்'** இந்தப் போராட்டத்தை தேவையில்லாமல் செய்துவிட்டது.

அதன் பின் 1975 வரை இந்தித் திணிப்பு நம்மைப் பாதிக்காத வகையில் தடைபட்டுக்கிடந்தது. 1976-ல் 'மிசா' தந்த வாய்ப்பு ஒருபுறம்; அதனைத் தொடர்ந்து 1977-ல் தமிழகத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின் சில காலம் இந்தி தயங்கி நின்றது. ஆனால் 1981-க்குப் பின் தமிழக ஆட்சியே நடுவண் அரசின் கிளை போலச் செயற்படத் தொடங்கியது. இன்றோ இராசீவ் பிரதமராக உள்ள இந்த நேரத்தில் தமிழக முதல்வர் முற்றிலும் பிரதமருக்குக் கட்டுப் பட்டு அடிமையாட்சியே நடத்தி வருகிறார். **'பிரதமர் இராசீவ் தமிழகத்தைப் பொறுத்தவரையில் தன் கட்சிப் பிரமுகர்களைவிட எம்.சி.ஆர். மீதே அதிக நம்பிக்கை வைத்துள்ளார்'** என்று **'இல்லஸ்ட்ரேடட் வீக்லி'** எனும் இதழ் அண்மையில் குறிப்பிட்டிருப்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

இந்த நிலையில் **'இந்தித் திணிப்பு'** மேளதாளத்துடன் பட்டுக்கம்பள வரவேற்புடன் நடைபெறுகிறது. தமிழக அரசோ ஒப்புக்கு ஒரு தீர்மானத்தைப் போட்டுவிட்டு உண்மையில் தமிழக மக்களின் உணர்வைப் புலப்படுத்த அஞ்சுகிறது. **'மொழிக்கு வளர்ச்சி தேடுகிறோம்'** என விழாக்களை மட்டும் காட்டிவிட்டு, மொழி எக்கேடு கெட்டாலும் கெடட்டும் எனும் போக்கில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த நிலைமையில்தான் அரசியல் சட்டத்தின் 17-ஆவது பிரிவில் நமக்கு உடன்பாடில்லாத வாசகம் அமைந்த தாளைத் தீயிட்டுக் கொளுத்தும் போராட்டம் நடந்துள்ளது.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக இந்தப் போராட்டம் நடைபெற்று வருகிறது என்று நமது மேடைகளில் பேசப்படுகிறது. இதுவே நமக்குக் கேவலம்தான் என்பது என் கருத்து. 1968-ல் அடித்த அடியிலேயே இந்தப் போராட்டம் முடியவில்லை என்பதும் இந்தித் திணிப்பை எதிர்க்கும் வேலை முன்னைவிடக் கடுமையாகி உள்ளது என்பதும் உண்மை. நடுவண் அரசின் ஆதிக்க மனப்பாங்கையும், தமிழக அரசின் பழிவாங்கும் போக்கையும் ஒரே நேரத்தில் எதிர்க்க வேண்டிய பொறுப்பும் இயக்கத்திற்கு உள்ளது. மாணவர்கள் கிளர்ச்சியில் இறங்கியுள்ளார்கள் என்றாலும் 1965 போல என்று சொல்ல முடியாது. ஒவ்வொரு கல்லூரி வாயிலிலும் 20-க்கு மேற்பட்ட காவல்துறையினர் ஒரு மூடு உந்தோடு (வேன்) வந்து காத்து நிற்கின்றனர். மாணவர்களிடத்திலும் பண்டு போல் எழுச்சி இல்லை. பொதுமக்களோ சொல்லவே வேண்டாம். அவர்கள் பொழுதுபோக்கிலும், திரைப்பட அரங்குகளிலும், சாராயக் கடைகளிலும் மயங்கிக் கிடக்கிறார்கள். அவர்களுக்குத் தாய்மொழியின் அருமை பெருமைகள் மறந்து போய்விட்டன என்றே சொல்லலாம்.

இந்நிலையில் நான்காவது பெரும் போராட்டத்தை நடத்திவரும் தி.மு.கழகத்திற்கும், துணை செய்யும் திராவிடர் கழகத்திற்கும் மிகப்பெரும் பொறுப்பு உள்ளது.

ஆங்கிலத்தைப்போல் இந்தியும் நமக்கு அயல்மொழியே என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

''ஆங்கிலம் அயல்மொழியெனின் இந்தியும் ஏனை மொழி பேசுவார்க்கு சிறப்பாக திராவிடர்க்கு அவருள்ளும் சிறப்பாகத் தமிழர்க்கு அயன்மொழியே. இந்தி இந்திய

மொழியெனின், ஆங்கிலமும் இன்று ஆங்கிலோ இந்தியரின் மொழியாய் இருத்தலில் இந்திய மொழியே!

ஆங்கிலம் பொதுமக்கள் மொழியாக முடியாதெனின் இந்தியும் தமிழகத்திலும் திராவிட நாடுகளிலும் வங்காளத்திலும் பொதுமக்கள் மொழியாக முடியாததே'' என்று அறிஞர் தேவநேயப் பாவாணர் கூறியுள்ள கருத்தை ஊன்றிப் பார்க்க வேண்டும்.

உலகத்தில் தொன்மை மொழிகளில் எல்லாமே வழக்கற்றுப் போக இன்றும் உலக வழக்கு, செய்யுள் வழக்கு எனும் இருவகையிலும் நிமிர்ந்து நிற்பது தமிழ் ஒன்றுதான்.

இந்தி மொழியின் முதல் இலக்கியமே கி.பி.1400-க்கும் 1490-க்கும் இடையில் வாழ்ந்த இராமானந்தர் இராமசரிதம் பற்றிப் பாடிய பாடல்களை உள்ளடக்கியதே. இந்நிலையில் இந்த அரை வேக்காட்டு மொழியில் ஆயிரம் அவியல்கள்; அவசர அலங்காரங்கள்; ஆர்ப்பாட்ட அணிவகுப்புகள்.

இந்தி தொன்மையும் இலக்கியச் செம்மையும் உள்ள மொழியாக இருந்தாலும் தமிழன் அதை ஒருநாளும் ஏற்க மாட்டான்; அப்படியிருக்கும்போது செல்வ மொழிக்குரிய தமிழனா சில்லரை மொழியை ஏற்பான்?

நேரு உறுதிமொழி சட்டமாக்கப்பட வேண்டும் என்பது ஒரு நிலை. அப்படியே சட்டமாக வந்தாலும் நாம் அயர்ந்து விடும் நேரத்தில், **'தமிழர்கள் விரும்பி ஏற்கிறார்கள்'** என்று போலிக் காரணம் காட்டி இந்தியை நீட்டி விடுவார்கள். இப்போதே செயகாந்தனும், சிவசங்கரியும், நா.பார்த்தசாரதியும் ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்பதாலும் அவர்களே மேடையில் இந்திக்கு வரவேற்புப் பா வாசிக்க வருகிறார்கள் என்பதாலும், பொதுமக்களே ஒப்புக்கொண்டதாக யாரும் மயங்கிவிட மாட்டார்கள்.

கூலிக்கு மாரடிப்பவர்களும், பதவிக்காகச் சோரம் போகிறவர்களும் தமிழகத்தில் சங்க காலத்திலிருந்தே இருந்துதான் வந்திருக்கிறார்கள். எங்கள் காலத்திலும் சில பதர்கள் இருக்கத்தான் செய்யும்.

ஆனால்,

**'செந்தமிழ்க்கே தீமைவந்த பின்னும் - இந்தத்**
**தேகம் இருந்தொரு லாப முண்டோ'**

எனும் பாவேந்தர் மொழியை நெஞ்சில் ஏந்திய தமிழன் ஒருநாளும் தோற்றுப் போக மாட்டான். இது உறுதி.

மேலும், தமிழையும் ஆட்சிமொழிகளில் ஒன்றாக ஆக்க வேண்டும் எனும் வேண்டுகோள் நம் உணர்வுக்கும், ஒருமைப்பாட்டைக் கட்டிக்காக்க விரும்பும் தமிழர்களின் கோட்பாட்டுக்கும் உகந்தது என்றாலும் நடுவண் அரசின் செவியில் இது ஏறவே ஏறாது.

**வெறியோடு பாய வரும் இந்திக்கு முன்**
**நெறியோடு எடுத்துச் சொன்னால் என்ன நடக்கும்?**
**மாங்குயில் கூவிடும் பூஞ்சோலைக்குள்**
**மாதவம் மேற்கொண்டுள்ள மறவர்களின் போராட்டம்**
**வென்றே தீரும்.**

# ‘அந்தமானைப் பாருங்கள்’
## நூல் வெளியீட்டு விழா

தமிழ் மக்களின் நெஞ்சச் சிறைச்சாலையில் நான் சிறைப் பட்டிருப்பதால் பேராசிரியர் தமிழ்க்குடிமகன் போன்ற தமிழ்ப் பெருங்குடி மக்களை என்றென்றும் என் நெஞ்சச் சிறைச்சாலையிலே நான் வைத்திருப்பேன் என்று இன்று (20.2.87) இங்கு **‘அந்தமானைப் பாருங்கள்’** என்னும் நூலை வெளியிட்டுச் சிறப்புரையாற்றிய தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தலைவர் கலைஞர் அவர்களது உரை வருமாறு:-

மதுரை யாதவர் கல்லூரியின் முதல்வரும் பேராசிரியர் பெருமகனும் முனைவருமான அன்புக்குரிய தமிழ்க்குடிமகன் அவர்கள் மேற்கொண்ட பயணத்தின் அடிப்படையில் இந்த நூல் அவரால் எழுதப் பெற்று நம் அனைவருடைய இனிய வாழ்த்துக்களோடு இன்றைக்கு இந்த மன்றத்திலே வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்க்குடிமகன் அவர்களைப்பற்றி மதுரையில், ஏன் தமிழகத்தில் இனி ஒரு அறிமுகம் தேவையில்லை என்பதே என் கருத்தாகும். இந்தத் தமிழ்க்குடிமகனைப் பற்றிய அறிமுகம் தேவையில்லையென்றாலும் தமிழ்க்குடிமகன் என்றால் யார் என்று சொல்ல வேண்டிய அவசியம் தமிழ்நாட்டில் இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடுவதற்கு இல்லை.

ஏனென்றால் நாங்களெல்லாம் தமிழர்கள், தமிழ்க்குடி மக்கள் என்பதை அடிக்கடி நாங்கள் உங்களுக்கு நினைவு படுத்தினால் தான் ஓகோ, அப்படியா என்று எண்ணவே தோன்றுகிறது.

அத்தகைய ஒரு சூழலில் சிக்கியுள்ள இந்தத் தமிழ் நிலத்திலிருந்து சில நாட்கள் அந்தமான் தீவில் பயணம் நடாத்தி பல சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள், பட்டி மன்றங்கள் இவைகளில் கலந்துகொண்டு அந்தத் தீவிலே உள்ள வரலாற்றுச் சிறப்புக்குரிய பல்வேறு பகுதிகளைச் சுற்றிப் பார்த்து அந்தத் தீவில் ஆங்காங்கு காணப்படுகிற சிறுசிறு பகுதிகளுக்கும் மிகுந்த சிரமத்துக்கிடையே பயணம் மேற்கொண்டு அங்கு வாழ்கின்ற பழைய நாகரிகத்தைக் கைவிடாத மனிதர்களையும் கைவிடாத வாய்ப்பைப் பெற்று அனைத்தையும் ஒன்றுவிடாமல் ஒரு சிறிய நூலில் நமக்கெல் லாம் வழங்கியிருக்கின்றார்கள்.

இந்த நூலுக்கு அணிந்துரை எழுதுகின்ற வாய்ப்பினைப் பெற்றேன். அது ஒரு நல்ல வாய்ப்பு. ஏனென்றால் பலமுறை அழைத்தும்கூட அந்தமானுக்குச் செல்கின்ற அந்தச் சூழல் எனக்கு ஏற்படவில்லை.

எனவே அந்தமானைப் பாருங்கள் என்ற இந்த நூல் மூலமாகவே அந்தமானைப் பார்த்துவிடலாம் என்ற முனைப் போடு எல்லாப் பக்கங்களையும் படித்து முடித்துவிட்டு அணிந்துரை எழுதியிருக்கின்றேன்.

**'அந்தமானைப் பாருங்கள்'** என்ற இந்த நூலைப் பார்த்து விட்டு நான் அணிந்துரை எழுதவில்லை. படித்துவிட்டுத் தான் அணிந்துரை எழுதியிருக்கிறேன். அதைத்தான் இங்கு பேசிய நண்பர்கள் எல்லாம் சுட்டிக்காட்டினார்கள். இதனை வெளியிட்டிருப்பவர்கள் பாரதி பதிப்பகத்தார். அவர்கள் நம்முடைய பாராட்டுக்குரியவர்கள்.

என்னுடைய அணிந்துரையும், தமிழ்க்குடிமகன் அவர்களின் முன்னுரையும் **'அந்தமானைப் பாருங்கள்'** என்ற 160 பக்கம் கொண்ட இந்த நூலில் ஒட்டப்பட்டிருக்கின்றன. ஒட்டப்பட்டிருக்கின்றன என்பதை வெளியீட்டாளர்தான் தெரிந்து கொள்ள முடியும். ஏனென்றால் இந்த நூலின் நீள அகல அமைப்புக்கும், நான் எழுதிய அணிந்துரை, தமிழ்க்குடிமகன் எழுதிய முன்னுரையும் அச்சிடப்பட்டுள்ள பக்கங்களின் வேறுபாட்டையும் பார்த்தால் இது நூலோடு இணைந்து வந்தது அல்ல. ஒட்டப்பட்டது என்பது புரியும்; ஒருவேளை அவசரம் அவசரமாக மதுரையில் நூலை வெளியிட வேண்டும் என்பதற்காக இதை ஒட்டியிருப்பார்கள் என்று கருதுகிறேன். அல்லது பாரதி பதிப்பகத்தினர் எங்களோடு ஒட்டியிருப்பவர்கள் என்ற காரணத்தால் இதை அவசரமாக அச்சியற்றி இந்த நூலுடன் ஒட்டியிருப்பார்கள் என்றும் கருதுகிறேன்.

## பெரியாரின் கொள்கையும் அண்ணாவின் தமிழுமே எனது வெற்றிக்கு அடித்தளம்

நான் ஒரு எழுத்தாளன். தென்னரசு இங்கே மிகைப்படுத்தி எழுத்தாளனுக்கெல்லாம் எழுத்தாளர் என்றெல்லாம் சொன்னார். நான் அடக்க உணர்வின் காரணமாக அல்ல; உண்மையிலேயே அதை ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. இருந்தாலும் கூட நான் எழுத்தாளனாக விரும்பி அந்த முயற்சியிலே ஈடுபட்டு கட்டுரை கதைகளை எழுதி புதினங்களைத் தீட்டி, நாடகங்களை வரைந்து திரைப்படத் துறையிலும் ஈடுபட்டு என் எழுத்துகளின் மூலம் தமிழ் மக்களைச் சந்தித்த நேரத்தில் நான் அதிலே வெற்றி பெற்றிருப்பேனேயானால் அதற்கு அடித்தளமாக அமைந்தது தந்தை பெரியார் அவர்களின் கொள்கையும் பேறிஞர் அண்ணா தந்த தமிழும்தான் என்பதை எடுத்துக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நான் எழுதி நானே நடித்த நாகை திராவிடர் கழகத்தின் நாடகம் ஒன்று புதுவை மாநிலத்தில் நடந்தபோது ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாக பெரும் கலவரத்திற்கு நாங்களெல்லாம் ஈடு கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு தந்தை பெரியார் அவர்கள் தன் கரங்களால் மருந்து தடவி நீ என்னோடு குடியரசு அலுவலகத்திற்கு வந்துவிடு என்று அழைத்துச் சென்றார். நான் குடியரசு அலுவலகத்தில் துணை ஆசிரியராக திங்கள் ஒன்றுக்கு நாற்பது வெண்பொற்காசுகள் ஊதியமாகப் பெற்று வந்தேன். அப்போது நான் முதன் முதலாக அங்கே கற்றுக்கொண்ட பாடம் - நான் எழுத்தாளன் என்றாலும்கூட பிழை திருத்துவதில் மிகவும் திறமையானவன் என்ற பட்டத்தைத் தந்தை பெரியார் அவர்களிடமிருந்து பெற்றேன்.

பெரியார் அவர்களின் எழுத்துக்களைப் படித்து அதை அச்சுக் கோப்பது என்பது சாதாரணமான காரியம் அல்ல. தமிழில் தான் எழுதுவார் என்றாலும் கூட தமிழ் எழுத்துக்கள் ஒன்றோடு ஒன்று பிணைந்து பிணைந்து கோடுகள் மாதிரித் தான் தெரியும். அதனை அச்சுக்கோப்பதற்கு என்றே குடியரசு அலுவலகத்தில் ஆற்றல் மிக்கவர்கள் இருந்தார்கள். அச்சுக் கோத்ததும் அய்யா அவர்களின் எழுத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து சரியாக இருக்கிறதா என்று பிழைதிருத்துகிற பணி மிகப் பெரும் பணியாகும்.

அந்தப் பணியிலே ஈடுபட்டிருந்த மூன்று நான்கு பேரில் நான் ஒருவன், ஒரு நூலானாலும் துண்டு அறிக்கையானாலும் சுவரொட்டியானாலும் அல்லது பத்திரிகையானாலும் என் கையில் தந்தவுடன் முதலில் அதில் என்ன பிழை இருக்கிறது என்பது என் கண்களில் பட்டுவிடும்!

அதனால் என்னுடைய ஆசிரியர் பணியின் தொடக்கமே பிழைதிருத்துகின்ற பணியாக இருந்த காரணத்தால் என்ன பிழை இருக்கிறது என்றுதான் பார்க்கத்தோன்றும். இப்பொ

முழுதுகூட நூல் என் கையில் தரப்பட்டதும் இதில் உள்ள படங்களையெல்லாம் பார்வையிட்டேன். பி.டி.ஆர். அவர்களிடத்தில் காண்பித்துக் கேட்டேன்.

ஒரு படத்துக்குக் கீழே நிக்கோபாரிகளின் நடனம் என்று தமிழில் போடப்பட்டு வளைவு அடைப்புக்குள் **"டிரடிஷனல்"** என்று போடப்பட்டிருக்கிறது. பி.டி.ஆரும் அது **"டிரடிஷனல்"** தான் என்று மேம்போக்காகப் பார்த்துவிட்டு சொன்னார்.

சில பேர் பிழை இருந்தாலும்கூட பிழையைப் பொறுத்து மன்னித்து அது இப்படித்தான் இருக்கவேண்டும் என்று படிக்கக் கூடிய ஆற்றல் பெற்றவர்கள். எனக்கு பிழையை சுட்டிக் காட்டுவதிலே ஒரு தனி சுகம். Tradition என்பதற்கு Tradifion என்று போடப்பட்டிருக்கிறது. இது எப்படி Tradition ஆகும் என்று கேட்டேன். ஒருவேளை பிழையாக இப்படி அச்சுக்கோப்பது Traditional. அந்த வகையில் இந்த முறை போலும் என்று கருதிக்கொண்டேன்.

நான் இவைகளைச் சொல்வதற்குக் காரணம் முழுமையாக நூலைப் படிக்காமலே அணிந்துரை எழுதி விட்டேன் என்று தமிழ்க்குடிமகன் நினைக்கக் கூடாதல்லவா? எனவே தான் எழுத்துப்பிழை கூடப் பார்த்துத்தான் அணிந்துரை எழுதியிருக்கிறேன் என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன்.

அதைப் போலவே **"அந்தமானைப் பாருங்கள்'** என்பதைச் செம்மையான தமிழில் தலைப்பாக தந்திருக்கிறார். ஆனால் பதிப்பாளர்கள் எழுதியுள்ள பதிப்புரையில் அந்தமானை பாருங்கள் என்று போட்டு அதில் **'ப்'** என்ற பகர ஒற்று காணாமல்போய் விட்டது. அதைப்போலவே தமிழ்க்குடிமகன் அவர்களது பெயரைக் குறிப்பிடும்போது தமிழ்குடி மகன் என்று சில இடங்களில் இருக்கிறது. **'க்'** இல்லை.

இந்த ப், க் இல்லாமல் போய்விட்டால் உப்பில்லாத பண்ட மாக ஆகிவிடும் தமிழ்மொழி என்பதற்காகத்தான் ஒன்று இரண்டு பிழைகள் இருந்தாலும்கூட அதையும் நேராதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும். அதுவும் ஒரு பேராசிரியப் பெருமகன் எழுதிய நூலில் இந்தச் சிறு பிழைகளும் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் முதலில் குறைகளைச் சொல்கி றேன். இவை குற்றங்கள் அல்ல. குறைகள்தான். குற்றம் வேறு; குறைகள் வேறு. அதை வேறுபடுத்திப் பார்த்தால் தான் தெரியும்.

எழில்வாய்ந்த அட்டையோடு அருமையான கருத்துக் கள் அடங்கிய நிலையிலும் ஒரு நூல் நம்முடைய கரங்களில் தவழ விடப்பட்டிருக்கிறது.

தமிழ்க்குடிமகன் குறிப்பிட்டதைப் போல இந்தி ஆதிக்க அறப்போராட்டத்திற்கு முன்பு என்னிடத்தில் இந்த நூலைத் தந்து அணிந்துரை வழங்கக்கேட்டு நானும் அணிந்துரை எழுதி அனுப்பினாலும்கூட இந்த நூலின் மற்றொரு பிர தியை நான் சிறைச்சாலைக்கு எடுத்துச் சென்று மீண்டும் ஒருமுறை படித்தேன்.

## அந்தமான் சிறைக்கொடுமை!

படித்து முடித்த பிறகு சிறைச்சாலையில் அந்தமான் தீவில் ஆங்கிலேயர் காலத்திலும், அதற்குப் பிறகு ஜப்பா னும் சில நாட்கள் அந்தமானை ஆதிக்கம் செலுத்துகின்ற அளவிற்குப் போரில் வெற்றி பெற்ற அந்த காலகட்டத்தி லும், அங்கு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் வந்து இறங்கு கின்ற வரையிலே அந்த அந்தமான் சிறை எந்த அளவிற்குக் கொடுமைக் கூடாரமாக இருந்தது என்கின்ற கால கட்டம் வரையில் நமது தமிழ்க்குடிமகன் எழுதியிருக்கின்ற அந்த வாசகங்களைப் பார்க்கும்போது வீரசவர்க்கார் எப்படி அடைக் கப்பட்டிருந்தார் அவர் அடைக்கப்பட்டிருந்த தனிமைச் சிறையிலிருந்து அவர் உலாவலாம் என்பதற்கு ஒதுக்கப்பட்ட

இடத்திலிருந்து அவரால் இயற்கைக் காட்சிகளைக் காண முடியுமா? கடற்கரையைக் காண முடியுமா? அல்லது உல்லாச விளையாட்டுகளைப் பார்க்க முடியுமா? தொழுவதற்கு ஏற்ற நிகழ்ச்சிகள் நடைபெற்று அவைகளைப் பார்த்து மன ஆறுதல் பெறமுடியுமா என்றால் அதற்கெல்லாம் இடமில்லாத வகையில் அவர் சற்று உலாவலாம், விண்வெளியைப் பார்க்கலாம் கூட்டுக்குள்ளே இருந்து, அந்தக் கூட்டின் முகப்பிலேயிருந்து உலக வளையத்தை உற்று நோக்கலாம் என்று எண்ணுவாரேயானால் அவர் கண்ணிலே படுவது தூக்குமேடை. அந்தத் தூக்குமேடையிலே நாள்தோறும் தொங்குகின்ற கைதிகள் இப்படிப்பட்ட ஒரு கொடுமையான, நினைக்கவே நெஞ்சம் நடுங்குகின்ற சிறைச்சாலையில் இந்திய நாட்டினுடைய விடுதலைக்காக பாடுபட்ட வீரசவர்க்கார் பல ஆண்டுக்காலம் அடைக்கப்பட்டிருந்தார். பலர் அந்த சிறைச்சாலையிலேயே உயிரையும் இந்த மண்ணின் விடுதலைக்காக தருகின்ற அளவிற்கு தியாகச் செம்மல்களாக வாழ்ந்தார்கள் என்று இந்தக் குறிப்புகளையெல்லாம் நம்முடைய தமிழ்க்குடிமகன் அவருக்கே கைவந்த உணர்ச்சியோடு தீட்டியிருப்பதைப் படித்த நேரத்தில் சென்னைச் சிறைச்சாலையிலே எங்களுக்கு இழைக்கப்பட்ட துன்பங்களை ஒப்பிட்டுப் பார்த்து இந்த நூல் முன்பே வெளிவந்திருந்து தமிழ்நாட்டுச் சிறைச்சாலைகளிலே அடைபட்டுக் கிடக்கின்ற நம்முடைய இருபதினாயிரம் கழகக் கண்மணிகளின் கைகளில் தரப்பட்டிருக்குமேயானால் திருச்சியிலோ, மதுரையிலோ, கோவையிலோ, பாளையங்கோட்டையிலோ, சேலத்திலோ, சென்னையிலோ ஆங்காங்கு அடைக்கப்பட்டிருக்கின்ற நம்முடைய கழக உடன்பிறப்புக்கள் ஒவ்வொருவரது கையிலும் இருந்திருக்குமேயானால், சிறைச்சாலையில் அதைப் படித்திருப்பார்களேயானால் இந்தச் சிறைச்சாலையிலே மூன்றுமாத காலம், ஆறுமாத காலம் அனுபவித்த தொல்லைகள், அந்தமான் சிறையிலே வீரசவர்க்கார் போன்ற

வர்கள் அனுபவித்த தொல்லைகளோடு ஒப்பிடும்போது ஒரு தூசுக்குச் சமானம் என்கின்ற எண்ணத்தோடு - இன்னும்கூட அதிக துணிவைப் பெற்றிருப்பார்கள்.

அந்த அளவிற்கு நான் இந்த நூலில் சிறைச்சாலை எவ்வளவு கொடுமையாக இருப்பது பற்றியும், ஒரு லட்சியத் திற்காக அந்தக் கொடுமைகளையெல்லாம் ஏற்றுக்கொண்ட வீரசவர்க்கார் போன்றவர்கள் வாழ்ந்தார்கள்; இன்னமும் இந்த நூலின் மூலமாக இதைப்போன்ற பல நூல்களின் மூலமாக நம்முடைய உள்ளங்களிலே வாழ்ந்து கொண்டிருக் கின்றார்கள். ஒவ்வொரு அத்தியாயத்திலும் தமிழ்க்குடிமகன் இதைப் புலப்படுத்துகிற நேரத்தில் தன்னுடைய ஆதங்கத்தை இங்கே ஆங்காங்கு சுட்டிக்காட்டாமல் இருக்கவில்லை.

சாவர்க்கார் இருந்த சிறைச்சாலைக்குள்ளே கொட்டடிக் குள்ளே உள்ளே சென்று நான் படமெடுத்துக் கொண்டேன். அந்தப் படம்கூட இந்தப் புத்தகத்திலே வெளியிடப்பட்டிருக் கிறது. அதனைப் பார்த்து நானும் அந்தச் சிறைச்சாலையிலே இருந்தேன் என்று எண்ணிக்கொள்ள வேண்டும் என்பதற்காக வெளியிடவில்லை. அந்தச் சிறைக்கோட்டத்தினுடைய அமைப்பு, அதிலே சாவர்க்கர் பெற்ற கஷ்ட நஷ்டங்கள் நீங்கள் சொல்வதைப் போல் ஒரு தியாக உணர்வு தமிழ் மக்களுக்கு ஏற்படவேண்டும் என்ற அந்த அடிப்படையிலே தான் இந்தப் படத்தை வெளியிடுகிறேன்'' என்று குறிப்பிட்டு விட்டு இன்றைக்கு யார் யாரோ சிறையிலிருந்ததாகத் தியாக முத்திரை பெறுகிறார்கள். யார் யாரோ சிறைச்சாலையைக் கண்டறியாதவர்கள் எல்லாம் தியாகி முத்திரை குத்திக் கொண்டு இந்த நாட்டிலே உல்லாசமாக வாழ முடிகிறது. அந்தப் பாரம்பர்யம் இல்லாதவர்களெல்லாம் இன்று நாட்டை ஆள முடிகிறது என்கின்ற ஆதங்கத்தை அவர் வெளியிட்டிருக்கிறார்.

## சிறுபான்மையராகிவிட்ட தமிழ் மக்கள்!

நம்முடைய நண்பர் கிருஷ்ணன் எடுத்துக்காட்டியது போல் அந்தமான் தீவில் முதலில் 35,000 பேர்தான் வங்காளத்தைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள். ஒரு பத்து - பதினைந்து ஆயிரம்பேர் இந்தி மொழி பேசுபவர்கள் இருந்தார்கள். அவர்களையெல்லாம் விட எண்ணிக்கையிலே அதிகமாக தமிழர்கள் 50,000 பேர் இருந்தார்கள். இந்தப் பத்து பதினைந்து ஆண்டு காலத்திலே 50,000 தமிழர்கள் அப்படியே இருக்கிறார்கள்.

ஆனால் அந்த 50,000 பேர் அப்படியே இருக்க, 35,000 பேர் இருக்கின்ற வங்காளிகளும், 10,000 பேர், 12,000 பேர்களாக இருந்த இந்தி மொழி பேசுபவர்களும் இன்றைக்கு 20,000 பேர்களாக உயர்ந்திருக்கின்றார்கள். வங்காளிகள் 35,000 பேர் 60,000 பேராக உயர்ந்திருக்கின்றார்கள். இது எங்கே கொண்டுபோய்விடும்?

இந்த எண்ணிக்கை உயர உயரத் தமிழர்களின் எண்ணிக்கை தானாகவே குறைந்துவிடும்.

இரண்டு குச்சியை வைத்து ஒரு குச்சியைச் சிறியதாக ஆக்கச் சொன்னால் ஒடிக்காமலே சின்னக்குச்சியாக ஆக்கச் சொன்னால் அதற்கு என்ன செய்வார்கள்? குச்சியையும் ஒடிக்கக் கூடாது. சின்னக் குச்சியாக்க வேண்டும். அதற்கு ஒரு பெரிய குச்சியை அதற்குப் பக்கத்தில் வைத்துவிட்டால் மற்றது தானாகவே சின்னக் குச்சியாகிவிடும்.

அதைப் போலத்தான் 50,000 பேர் தமிழர்கள் இருந்தாலும்கூட அவர்கள் சிறுபான்மையினராவதற்கு ஏற்கனவே சிறுபான்மையினராக இருந்த 35,000 வங்காளிகளை 60,000 பேராக, 10,000, 15,000 பேராக இருந்த இந்திமொழி பேசுபவர்களை 20,000 பேராக உயர்த்திவிட்ட நிலையில் தானா

கவே சிறுபான்மையினராகத் தமிழினம் அந்தமான் தீவில் ஆகியிருக்கிறது.

இதேபோலத்தான் பக்கத்திலே இருக்கின்ற இலங்கைத் தீவிலும்! தமிழர்களுடைய எண்ணிக்கையைக் குறைக்கின்ற அந்தக் காரியத்தில் அங்கே இருக்கின்ற சிங்கள அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. தமிழன் தமிழ்நாட்டிலே மாத்திரமல்ல, கடல் கடந்து பிழைக்கச் சென்ற இடத்திலும் இப்படிப்பட்ட அவதிக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்றான்.

அந்தமான் தமிழர்களானாலும் இலங்கைத் தமிழர்களானாலும் அவர்களுக்காகக் கண்ணீர் வடிக்க வேண்டியவர்களாக, அவர்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டியவர்களாக நாம் தான் இருக்கிறோம். அதிலே ஒரு சிக்கல் என்னவென்றால் அப்படி அவர்களுக்காகக் கண்ணீர் வடிக்கவேண்டுமானால் அந்தமானிலானாலும், இலங்கையிலானாலும் நாம் தான் முன் வரவேண்டும். இங்கிருக்கின்ற தமிழன் தான் ஒருவனோடு ஒருவன் மோதிக்கொண்டு சீர்குலைந்து விட்டான் என்றால் அங்கே அவதிக்காளாகியிருக்கும் தமிழனாவது, நாள்தோறும் இனப்படு கொலைகளைச் சந்திக்கின்ற தமிழனாவது ஒற்றுமையாக இருக்கிறானா என்றால் இல்லை.

ஒரு பக்கத்திலே வெறியர்கள் விமானங்களிலே வந்து குண்டுகளைப் பொழிகிறார்கள் என்ற செய்தி வருகிறது.

இன்னொரு பக்கத்திலே போராளிகளுக்குள்ளே புகைச்சல். இவர்களுக்குள்ளே ஒருவரை ஒருவர் வெட்டிக் கொன்று கொள்கிறார்கள் என்ற அந்தச் செய்தி வருகிறது. நாம் என்ன செய்வது என்று தெரியாமல் திகைக்கிறோம். இது தமிழர்களுடைய நிலை. தமிழினத்திற்கு ஏற்பட்ட சாபக்கேடு. அந்த சாபக்கேட்டிலிருந்து மீட்சி ஏற்படுமா? ஏற்படாதா? எனக்கே தெரியவில்லை. நினைப்பதற்கே தயக்கமாக இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையிலே தான் நம்முடைய அன்பிற்குரிய முனைவர் தமிழ்க்குடிமகனுடைய நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழ்க்குடிமகன் மதுரைப் பகுதியிலே மாத்திரம் அல்லாமல் தமிழ் நிலப்பகுதியில், தமிழர் உள்ளங்களில் நீங்காத இடத்தை வகிப்பவர்களாவார்கள். அவர்கள் சொன்னார்கள். நான் எங்கிருந்து விடுபட்டாலும் தலைவர் கலைஞர் அவர்களுடைய நெஞ்சச் சிறையிலிருந்து விடுபடமாட்டேன்; என்னை விடுவித்து விடக்கூடாது என்று சொன்னார்கள்.

நிச்சயமாக நான் சொல்கிறேன். என்னுடைய சிறையிலே, நெஞ்சச் சிறையிலே, வைத்திருப்பேன். நிச்சயமாகச் சொல்கிறேன். கைதி உடை போட்டுப் பார்க்கமாட்டேன். (கைதட்டல்)

என்றென்றும் உங்களுக்கு இந்தத் தமிழ் உடையைப் போர்த்தியே உங்களை வாழ்த்திக் கொண்டிருப்பேன். (கைதட்டல்)

உங்களைப்போன்ற தமிழ்க் குடிமகன்கள் பலர் இந்த நெஞ்சச் சிறைச்சாலையிலே தான் இருக்கிறார்கள். அவர்களாக வேண்டுமானால் எகிறிக் குதித்துப் பாய்ந்து இந்தச் சிறைச்சாலையிலிருந்து ஒரு சிலர் போயிருக்கிறார்களே தவிர அப்படி தப்பி ஓடியவர்களைப் பற்றி நான் கவலைப்படாமல் இருக்கலாமே தவிர தப்பி ஓடியவர்களைப் பிடித்து, இந்தச் சிறையிலே போட்டால் எவ்வளவு நாளைக்குச் சிறையில் இருக்கப் போகிறார்கள் என விட்டு விடலாமே தவிர இந்தச் சிறை மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை என்று எண்ணி இருக்கின்ற தமிழ்க்குடிமகனைப் போன்றவர்களை என்றென்றைக்கும் இந்தச் சிறைச்சாலையிலே வைத்திருப்பேன்.

காரணம் அவர்களுடைய நெஞ்சச் சிறைச்சாலையில் நான் இருக்கின்ற காரணத்தால் அவர்களையும் சேர்த்து, அந்தச் சிறைச்சாலையையும் சேர்த்து என் நெஞ்ச சிறைச் சாலையிலே நான் வைத்திருக்கின்றேன்.

அப்படிப்பட்ட ஒரு அருமையான, இந்த இயக்கத்திற்கு கிடைத்த மாணிக்கமாக, தமிழ் உணர்வை எடுத்துச் சொல் கின்ற ஒரு பேராசானாக நமக்கு வாய்த்திருப்பவர் தமிழ்க்குடி மகன்.

ஆனால் தெருவிலே தனியாக நடந்துபோனால் அவ ரைப் பார்ப்பவர்கள் - வேடிக்கை பார்ப்பவர்கள் - யாரோ பக்கத்து ஊர் விவசாயி போகிறார் என்று எண்ணுகிற அளவிற்கு அவ்வளவு எளிய தோற்றமுடையவர்.

இவர்தான் தமிழ்க்குடிமகன், கல்லூரி முதல்வர் என் றால் யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அந்த அளவிற்கு எளிய தோற்றத்தை உடையவர். விவசாயி போல் காணப்படு பவர். ஆனால் தமிழ் விவசாயம் செய்து கொண்டிருப்பவர். அந்தத் தமிழ் விவசாயம் பல்கிப் பெருக இதுபோன்ற நூல்களை அவர் மேலும் தரவேண்டும் என வாழ்த்தி விடை பெறுகிறேன்.

இவ்வாறு தலைவர் கலைஞர் உரையாற்றினார்.

# போற்றுவோம் கலைஞர் பண்பை!

*(முன்னாள் முதலமைச்சர் ம.கோ.இரா. (M.G.R.) மறைந்தபோது அண்ணா சாலையில் அமைந்திருந்த தலைவர் கலைஞர் அவர்களது சிலை சமூகக் கயவர்களால் சேதப்படுத்தப்பட்டது. அந்த நேரத்தில் எழுதப்பட்டது.)*

என் தமிழ்க் கலைஞ ரைப் போல்
இதுவரை எவரும் வந்து
தென்தமிழ் நாட்டுக் காகத்
தியாகங்கள் புரிந்த தில்லை;
வன்முறைக் கும்பல் இன்று
வார்சிலை சிதைத்த பின்பும்
என்தமிழ்த் தலைவன் பண்போ
இம்மியும் மாற வில்லை;

தீயவை பெருத்து நிற்க,
திருடர்கள் கொழுத்து நிற்க
நோயினை உணரா வண்ணம்
நோஞ்சானாய்த் தமிழன் சாக,
தாயவள் அடையும் துன்பம்
தடுத்திட முடியா வண்ணம்
போய்விடக் கூடா தென்றால்
போற்றுவோம் கலைஞர் தம்மை!

சலியாத உழைப்பி னாலும்
  தமிழின தாற்ற லாலும்
நலிவுறும் தமிழர் ஈழம்
  நாட்டிட முயல்வ தாலும்
பொலிவுறும் புதிய நாட்டைத்
  தோற்றுவார் என்ப தாலும்
புலியாக நிமிர்ந்து நிற்கும்
  கலைஞரைப் போற்று வோமே!

*(1987)*

# கலைஞர்க்கா தாழ்வு மனப்பான்மை?

(கல்லூரி முதல்வர் பொறுப்பில் இருந்தாலும் தொடர்ந்து **'முரசொலி'** படிக்கும் வாசகன் நான். 19.10.88 ஆம் நாளைய **'முரசொலி'** இதழில் கரிகாலன் பதில்கள் பகுதியில் என் நெஞ்சைத் துணுக்குற வைத்த பகுதி ஒன்று வந்தது. கலைஞர் அவர்களே விடை எழுதி விட்டாலும் தலைவரால் அடையாளம் காட்டப்பட்ட என் போன்றவர்கள் முன்வந்து பதிலுரைப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று கருதினேன். அதன் விளைவாக எழுந்ததே இந்தக் கட்டுரை. 5.11.88 ஆம் நாளைய **'முரசொலி'**யில் வெளி வந்துள்ளது.)

## முதலில் வினாவிடைப் பகுதி

**கேள்வி:-** ''தான் கலந்து கொள்கிற கூட்டத்தில் தனக்கு இணையான ஒரு தலைவர் இருந்தால்... கலைஞருக்கு ஒரு மாதிரி மனோதத்துவ ரீதியான தாழ்வு மனப்பான்மை தன்னைவிட யாரும் அதிகக் கைதட்டல் வாங்கக் கூடாது என நினைப்பார். அதனால்தான் முஸ்லீம் லீக் 40-வது ஆண்டு விழாவுக்கு அவரை மட்டும் அழைத்தோம்'' என்று அப்துல் சமது அவர்கள் பேட்டியில் கூறியுள்ளது குறித்து?

**பதில்:-** இணையான தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் மட்டுமல்ல, இணையற்ற தலைவர்களான பெரியார்,

அண்ணா, காயிதே மில்லத், காமராஜ், ராஜாஜி, ஜீவா ஆகியோருடன் எத்தனையோ கூட்டங்களில் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருக்கிறேன். இந்திரா காந்தியம்மையார் பிரதமராக இருந்தபோதும் சரி - எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதும் சரி, அவருடன் பொதுக்கூட்டங்களில் பேசி யிருக்கிறேன். ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களுடன் பொது நிகழ்ச்சிகளில் பேசியிருக்கிறேன். அவ்வளவு ஏன், சமது அவர்களுக்கு மிகவும் விருப்பமான உதாரணம் ஒன்று சொல்லுகிறேனே அண்மையில் பெரியவர் செங்கல்வரா யன் பிறந்தநாள் விழாவில் நானும், சமதும், காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனார் அவர்களும் கலந்து கொண்டு பேசினோமே அதை சமது மறந்துவிட்டாரா? **'மனோதத்துவ ரீதியான எனது தாழ்வு மனப்பான்மை'** என்று சமது அவர்கள் கேலி பேசுவதற்காக நான் வருந்தவில்லை! வாழ்க அவரது பெருந்தன்மை!

இதற்கு நான் எழுதிய கட்டுரை:

அண்மைக் காலத்தில் தி.மு.க. - முஸ்லிம் லீக் உறவில் கீறல் ஏற்படுத்தி அதற்கான காரணங்களையும் விரிவாக அள்ளிவிடும் வேலையில் இறங்கியுள்ளார் அப்துல் சமது. அரசியல் கோணத்தில் கலைஞரையோ, தி.மு.க.வையோ அவர் எப்படி வேண்டுமானாலும் திறனாய்வு செய்யட்டும். அவற்றை உரிய முறையில் சந்திப்பதும் விடை சொல்வதும் தி.மு.க.வின் பொறுப்பு. நான் அதில் தலையிட்டு எதுவும் கூற வேண்டியதில்லை.

ஆனால் ஒரு தமிழ்ப் பேராசிரியன் எனும் முறையிலும் கலைஞர் அவர்களோடு நெருங்கிப் பழகிய ஒரு கல்லூரி முதல்வர் எனும் முறையிலும் மேடையில் அவர் நடந்து கொள்ளும் முறை பற்றி நன்கு அறிவேன். இந்த நேரத்தில் நான் என் கருத்தைக் கூறாவிட்டால் கடமை தவறியவன் ஆவேன்.

அப்துல் சமதுவின் செய்தி இப்படி அமைகிறது.

''தான் கலந்து கொள்கிற கூட்டத்தில் தனக்கு இணை யான ஒரு தலைவர் இருந்தால் கலைஞருக்கு ஒரு மாதிரி மனோதத்துவ ரீதியான தாழ்வு மனப்பான்மை - தன்னைவிட யாரும் நன்றாகப் பேசக் கூடாது தன்னைவிட யாரும் அதிகக் கைதட்டல் வாங்கக் கூடாது என நினைப்பார். அதனால்தான் முஸ்லிம் லீக் 40-வது ஆண்டு விழாவுக்கு அவரை மட்டும் அழைத்தோம்.''

இது குறித்து கலைஞர் அவர்கள் விடை சொல்லும் போது தனக்கு இணையான தலைவர்களுடனோ, பெரியார், அண்ணா, காயிதே மில்லத் போன்ற இணையற்ற பெருந்த லைவர்களுடனோ பேசும்போது தன் நிலை என்ன என்ப தைத் தெளிவு படுத்தியிருக்கிறார்கள். நான் கூற வருவது, தனக்கு எந்த வகையிலும் இணையே இல்லாத எங்களைப் போன்றவர்களிடமும் கலைஞர் எப்படி நடந்து வந்திருக் கிறார் என்பதைத்தான்.

நான் நேரடி அரசியலில் இருந்த காலம் முதல் (1969) இன்றுவரை தடம் மாறாதவன் என்ற ஒரு தகுதியைத்தான் கலைஞர் அவர்களிடம் புலப்படுத்தி இருக்கிறேன். இந்த நிலையில் 1979 ஆம் ஆண்டு நான் கல்லூரி முதல்வர் ஆனதும் கலைஞர் அவர்களைக் கல்லூரிக்கு அழைத்துப் பேசச் செய் தேன். ஓரளவு என் ஈடுபாடு தெரியுமே தவிர, தனிப்பட்ட முறையில் கூட நான் அதுவரை அவரைச் சந்தித்துப் பேசிய தில்லை. எனினும் முதல்வர் எனும் முறையில் நான் அளித்த (5 மணித்துளி) வரவேற்புரை அவரைப் பெரிதும் கவர்ந்தது. அந்த வரவேற்புரையின் உள்ளடக்கம், உணர்ச்சி, கலைஞரி டத்தில் என் எதிர்பார்ப்பு ஆகியவற்றை முழுமையாகப் புரிந்துகொண்ட கலைஞர் அவர்கள் சிறப்புரையாற்றும் போது **''தமிழ்க்குடிமகன்''** எனும் தலைப்பையே தேர்ந்தெ டுத்துக் கொண்டார்கள். எம்.ஜி.ஆர். அரசால் திடீரென

அறிவிக்கப்பட்ட 9000.ரூ வருமான வரம்பு பற்றிய செய்தி களை உள்ளடக்கிப் பேசினாலும் சிலேடைப் பொருளில் தலைப்பை அமைத்துக் கொண்ட கலைஞர் அவர்களை எவரும் கட்சி வேறுபாடு கடந்து பாராட்டவே செய்வர். **''அந்தத் தமிழ்க்குடிமகன் காப்பாற்றப்பட வேண்டும்''** என்று தொன்மை வரலாறு படைத்த தமிழ்க் குடிமகனையும், வருமான வரம்புக்காட்பட்டுத் தவிக்கும் பிற்படுத்தப்பட்ட தமிழ்க் குடிமகனையும் ஒருங்கிணைத்துப் பேசினார்.

நேரடி அறிமுகமில்லாத என்னை ஒரு பொருட்டாக மதித்துத் தலைப்பாக்கிப் பேசியிருக்கிறார் என்று சொன் னால் இதுதான் கலைஞரின் தாழ்வு மனப்பாங்கா?

சி.இறையரசன் எனும் அன்பர் **''குறளும் பொருளும்''** எனும் நூலை எழுதினார். அவர் திருச்சி மாவட்டக் கட்சியில் ஓர் ஒன்றியப் பொறுப்பாளர் எனும் முறையில் கலைஞர் அவர்களை அணுகி வெளியீட்டு விழாவுக்கு வருகை தரக் கேட்டுக் கொண்டார். கலைஞரும் இசைந்தார். நூலைப் படித்துத் திறனாய்வு செய்வதற்குரியவர்கள் எனும் வகையில் ஐந்தாறு பெயர்களை இறையரசன் குறிப்பிட்டார். அவற்றுள் என் பெயரும் இடம் பெற்றிருந்தது. உடனே கலைஞர் என் பெயரைக் குறிப்பிட்டு அழைக்கச் சொல்லி விட்டார். அதன் படி நான் கலந்துகொண்டேன்.

திருச்சி தேவர் மன்றத்தில் புரவலர் அன்பில் அவர்கள் தலைமையில் நிகழ்ச்சி. நான் திறனாய்வுரை நிகழ்த்திப் பேசிய பின் கலைஞர் பேசும்போது குறிப்பிட்டார். 'நான் குறளோவியம் எழுதி வருகிறேன். அதில் ஏதாவது குறையி ருப்பதாக, தமிழ்க்குடிமகன் போன்ற நம்பிக்கைக்குரிய பேராசிரியர்கள் ஓர் அஞ்சலட்டையில் எழுதிப் போட்டால் கூட நான் திருத்திக் கொள்ளத் தயார்' என்று பேசினார்.

ஒரு தமிழ்ப் பேராசிரியன், அதிகம் அறிமுகமில்லாத ஒரு பேராசிரியன் கலைஞரைப் போலச் சொற்பொழி

வாலோ, கனல் கக்கும் வேகமான எழுத்தாலோ சிலிர்க்க வைக்கும் திரைப்பட உரையாடலாலோ, வேகமான செயலாலோ பெயர் பெறாத ஒரு பேராசிரியன், குறையைச் சுட்டினால் கூடத் திருத்திக் கொள்ளத் தயார் என்று கலைஞர் குறிப்பிடுவார் என்றால் இதுதான் கலைஞரின் தாழ்வு மனப்பாங்கா?

31.7.1983-ல் இராமநாதபுரத்தில் தி.மு.க. மாநாடு, ஈழத் தமிழர் படுகொலை மிகவேகமாக நடந்து, அகதிகள் கூட்டங் கூட்டமாக இராமேசுவரம் வந்து சேர்ந்து கொண்டிருந்த நேரம். தமிழகம் முழுவதும் ஒரே நிலையில் கொந்தளித்து எழுந்த காலம். அந்த மாநாட்டில் பாண்டித்துரைத் தேவர் படத்தைத் திறந்து வைத்துப் பேசும் வாய்ப்பு எனக்கு அளிக்கப்பட்டிருந்தது. அதுவும் கலைஞர் அவர்களே சென்னையிலிருந்து திரு.தென்னரசு அவர்கட்குத் தொடர்பு கொண்டு அவர் வாயிலாக என் ஒப்புதல் பெறப்பட்டது.

தமிழ் வளர்த்த வள்ளல் பாண்டித்துரைத் தேவர் படத்தைத் திறந்து வைத்து 20 மணித்துளிகள் உரையாற்றினேன். ஏறத்தாழ 2 இலட்சம் பேராவது அரங்கில் இருந்திருப்பர். வள்ளல் அவர்கள் ஓடி ஓடிச் செய்த தமிழ்த்தொண்டுகளை வரிசைப்படுத்தியும், பாஸ்கர சேதுபதிக்கும், பாண்டித்துரை தேவருக்கும் இருந்த உறவுப் பகுதியை உணர்ச்சியுடன் குறிப்பிட்டும், ஒரு தொண்டன் தன் தலைவனிடத்தில் என்ன எதிர்பார்ப்பான் என்பதைக் குறள் மேற்கோளோடு ஒப்பிட்டும் உருக்கமாகப் பேசி முடித்தேன்.

**'தான் கலந்து கொள்கிற கூட்டத்தில் தன்னைவிட யாரும் நன்றாகப் பேசக்கூடாது - தன்னைவிட யாரும் அதிக கைதட்டல் வாங்கக் கூடாது என்று கலைஞர் நினைப்பார்'** என்று அப்துல் சமது குற்றம் சாட்டுகிறாரே அது எவ்வளவு வஞ்சகமானது என்பதற்காகத்தான் இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறேன்.

நான் பேசும்போது பலமுறை கைதட்டல்கள். விறுவிறுப்போடும் உருக்கத்தோடும் முடிந்த அந்த பேச்சுக்குப் பலநூறு பாராட்டுதல்கள். இவற்றை எல்லாம் தாண்டி அமைந்தது தலைவர் கலைஞர் அவர்களின் பாராட்டு.

நான் பேசி முடித்துவிட்டு என் இருக்கைக்குத் திரும்பினேன். அவர் முன்னால் உள்ள இடைவெளியில் நடந்து முதல்வரிசை தாண்டி உள் வளைந்து இரண்டாவது வரிசையில் உள்ள என் இடத்துக்கு வரவேண்டும். அப்படி நான் கலைஞர் இருக்குமிடத்தைக் கடக்க முயன்றபோது எதிர் பாரா வகையில் அவரே எழுந்து நின்றார். என் கைகளைப் பற்றிக் குலுக்கினார். அவர் சொன்ன சொற்கள் என் நெஞ்சில் அப்படியே பதிந்திருக்கின்றன. இதற்கு மேல் எனக்கொரு பாராட்டு விழாவோ, வாழ்த்து மொழிகளோ தேவையில்லை எனும் அளவுக்கு அவருடைய பாராட்டுச் சொற்கள் இருந்தன. அதனை இன்றைக்குத்தான் எழுத்து வடிவில் முதன் முறையாக வெளியுலகுக்குத் தெரிவிக்க நேரிடுகின்றது. அவர் சொன்னார், **'ஈழத்தமிழர் பிரச்னை என்றாவது ஒருநாள் தீர்ந்து விடும். ஆனால் உங்கள் பேச்சு என்றும் அழியாது'** என்றார்.

நான் மிகவும் நெகிழ்ந்து போய் விட்டேன். என் பேச்சு அவரை எவ்வளவு ஈர்த்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வது எளிது. ஆனால் ஒரு தொண்டன் நிலையில் இருக்கும் என் பேச்சு அவரால் இவ்வளவு பாராட்டப்பட்டது என்றால் இதுதான் கலைஞரின் தாழ்வு மனப்பாங்கா? பிறர் நன்றாகப் பேசுவதைப் பொறுத்து கொள்ள முடியாதா போக்கா? அப்துல் சமதுக்குத்தான் வெளிச்சம்.

சென்னை, பெரியார் திடலில், **'குறளோவியம்'** வெளியீட்டு விழா நடைபெற்றது. தலைமையேற்று வெளியிட்டு, வாழ்த்துரை வழங்கிய பெருமக்கள் பலர். கி.ஆ.பெ., வ.சுப.மாணிக்கனார், ச.தண்டபாணி தேசிகர் சாவி, சாண்டில்யன்

ஆகியோர் கலந்து கொண்டனர். வாழ்த்துரை வழங்கிய ஒன்பது பேருள் நானும் ஒருவன். என் பேச்சு அவைக்கு இனித்தது என்பதோடு நான் விட்டு விட்டால் அது பொருந்தாது.

அடுத்த நாள் மாவட்டச் செயலாளர்கள் கலைஞருடன் பேசிக் கொண்டிருந்த போது **''தமிழ்க்குடிமகன் பேச்சு மிக எடுப்பாக இருந்தது''** என்று குறிப்பிட்டுள்ளார். இரண்டொரு நாட் சென்றபின் நண்பர் தங்கப்பாண்டியன் என்னைச் சந்தித்து இதைக் கூறியபோது என் உள்ளம் எப்படிப் பரபரத்திருக்கும்?

தலைப்பிட்டுப் பேசிப் பாராட்டுவது, நம்பிக்கையுடன் போற்றுவது, தனியாகப் பாராட்டுவது, உரியவர் இல்லாத போதும் பிறரிடம் பராட்டுவது என்றெல்லாம் பல பண்புகளை வைத்துக் கொண்டிருக்கிற கலைஞரா தாழ்வு மனப்பாங்குடையவர்? அப்துல் சமதுக்கு இது அடுக்குமா என்றுதான் கேட்கத் தோன்றுகிறது!

**'குறளோவியம்'** விழாவில் நான் பேசியதன் விளைவு, சிறிதுகாலம் கடந்து எனக்கு மற்றுமொரு சிறப்பைத் தேடித் த்ந்தது. **'குறளோவியம்'** முதற்பதிப்பு விற்றுத் தீர்ந்து இரண்டாவது பதிப்பு அச்சானபோது அதன் வெளியீட்டு விழா சேலத்தில் நடைபெற்றது. வீரபாண்டியாரும், பாரதி பதிப்பகத்தாரும் இணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் விழா அது. அதில் எனக்கு என்ன பொறுப்பு தெரியுமா? நான் தான் வெளியீட்டாளர். ஒரு நிகழ்ச்சியில் சிறப்பாகப் பேசிக் கைதட்டுதல்கள் வாங்கிவிட்டவன் எனும் முறையில் கலைஞர் இதைத் தாங்கிக் கொள்ளமாட்டார் எனும் அப்துல் சமதின் கூற்று உண்மையாக இருந்தால் சேலம் நிகழ்ச்சியில் எனக்குப் பதவி உயர்வு ஏன்?

தாழ்வு மனப்பாங்கு இருந்திருந்தால் கலைஞர் என்னை அடுத்த நிகழ்ச்சிக்கு அழைக்கச் சொல்லி வற்புறுத்தி இருப்பாரா?

அது மட்டுமன்று **"வெளியீட்டுரைதான் விரிவாக இருக்க வேண்டும். எனவே நீங்கள் ஒரு மணிநேரம் பேசுங்கள். எனக்கு ஏற்புரைதானே. 15 மணித்துளியில் முடித்து விடுவேன்"** என்று காதில் ஓதினார். அதிலும் அனைவரும் பேசி, கடைசியாக கலைஞர் பேசுவதற்கு இடையில் நான் பேசியாக வேண்டும். கூட்டம் என்ன எதிர்பார்க்கும், கலைஞர்க்கு இடையில் வந்த நந்தி என்று கூட என்னை இகழும் என்பது எனக்குத் தெரியும்.

இந்த நிலையில் நயமான செய்திகளுடன் அவையினரின் கையொலிகளுடன் நான் 45 மணித்துளிகள் பேசியிருக்கி றேன். தன் முன்னால் என்னைத் தாராளமாய்ப் பேசவிட்டு நான் கையொலியால் வரவேற்கப்படும் போதெல்லாம் மகிழ்ச்சியில் திளைத்துவிட்டு ஏற்புரையிலும் என்னைப் பாராட்டிய பெருந்தன்மை படைத்தவர் கலைஞர்.

**'கிராமத்து விவசாயி போல் தோற்றமளிக்கும் எளிமை படைத்தவர். ஆனால் கல்லூரி முதல்வர் எனும் பதவியால், பெருமை படைத்தவர்'** என்றல்லவா பாராட்டினார்?

இன்று இயக்கத் தோழர்களும் பொதுமக்களில் பலரும் என் மீது மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்றால் **'கலைஞர் என்மீது மதிப்பு வைத்திருக்கிறார்'** என்பதைத் தெரிந்து வைத் திருப்பது தானே காரணம்!

ஒருவனது பேச்சுத் திறமையை எடுத்த எடுப்பிலேயே புரிந்துகொண்டு பாராட்டி, மேலும் மேலும் வளர்த்து ஆளாக் கிவிட்டு, ஒவ்வொரு பேச்சையும் கேட்டுச் சுவைத்து நெகிழ்ந்து பாராட்டி, தான் பாராட்டுவதால் நாடே பாராட்ட வேண்டும் எனும் எதிர்பார்ப்போடு என்னை ஆளாக்கிவிட்டி

ருக்கும் கலைஞரா தாழ்வுமனப் பாங்குடையவர்? அதை யும் ஒரு பொறுப்புடைய அப்துல் சமதா இப்படிக் கூறுவது? இதுதான் முரண்தொடை போலும்!

அப்துல் சமதுக்கு வேறு இடம் போக வேண்டும் எனும் தேவை ஏற்பட்டால் போகலாம். ஆனால் போகிற போக்கில் புழுதி வாரித் தூற்றி விட்டுப் போகக்கூடாது. புளுகுகளை அள்ளி விடக்கூடாது. பொருந்தாதவற்றைக் கூறி, **'இவர் கூறும் அனைத்தும் இப்படித்தான் இருக்கும்'** என்று பொதுமக் கள் முடிவுக்கு வரும்படி புளுகக்கூடாது.

**'கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற**
**வல்லுதூ உம் ஐயம் தரும்''**

எனும் குறளையே அவருக்கு விடையாகத் தருகிறேன்.

தாழ்ந்து தலைகவிழ்ந்து தடுமாறித் தடமாறிப் போய்க் கொண்டிருக்கும் தமிழகத்தை தூக்கி நிறுத்திடத் துடிப்புடன் செயலாற்றும் தோள் (ஆள்) வலிமை படைத்த ஒரே தலைவர் கலைஞர் என்பதை உலகம் உணரும்; பொழுதும் புலரும்!

# சட்டப் பேரவையில் பாராட்டு!

*(8.2.89 அன்று நான் சட்டப் பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்ற போது என்னை இந்த உயர்வுக்கு ஆளாக்கிய தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிய பாராட்டுரையின் சுருக்கம்.)*

**மாண்புமிகு டாக்டர் மு.கருணாநிதி:-** பேரவையினுடைய மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழை வாழ்த்துவதுபோல உங்களை வாழ்த்துகின்ற பேறு பெற்றமைக்காக நான் பெருமையடைகிறேன். இந்த அவைக்குத் தமிழ்க்குடிமகன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது சாலப் பொருத்தமுடைய ஒன்றாகும்.

தாங்கள் பெரும் புலவர் என்கின்ற வகையில் தமிழகத்திலே அறிமுகம் ஆனவர். அதுமாத்திரமல்ல; யாதவர் கல்லூரியினுடைய முதல்வராக இருந்து, நம்முடைய எதிர்க்கட்சியினுடைய தலைவர்கள் எல்லாம் எடுத்துக் காட்டியதைப் போல அந்தக் கல்லூரியைச் சிறப்புற நடத்தி மேன்மை பெற்றவர்.

10 ஆண்டுகளுக்கு முன்பு (1979-ல்) தாங்கள் முதல்வராக வீற்றிருந்த யாதவர் கல்லூரிக்கு நான் அழைக்கப்பட்டிருந்தேன். ஆளும் கட்சியின் சார்பாக அல்ல; எதிர்க்கட்சித்

தலைவர்களில் ஒருவனாக அழைக்கப்பட்டிருந்தேன். அப்போது நான் மேடையிலே அமர்ந்த பிறகு உங்களுக்கு விருப்பமான தலைப்பிலே பேசலாம் என்று பணித்தீர்கள். நான் அன்று பேசிய அந்த வாசகத்தை இங்கே நினைவுகூர விரும்புகிறேன். ''நீண்ட உரைக்குத் தலைப்பு எதுவாக இருக்கலாம் என்று மேடையில் இருந்தவாறு நான் யோசித்தேன். தலைப்பு தமிழ்க்குடிமகன் என்பதுதான். தமிழ்க்குடிமகன் பழங்காலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐவகை நிலங்களைப் பிரித்துக் கொண்டு அந்த நிலங்களுக்கு ஏற்றவாறு வாழ்க்கையை அமைத்துக் கொண்டு, வாழ்வு நெறியை உருவாக்கிக் கொண்டு வாழ்ந்தவன்''.

தமிழ்க் குடிமக்களுக்காக அமைந்துள்ள இந்த ஆட்சியில் தமிழ்க்குடிமகனாகிய தாங்கள் இந்தப் பேரவைக்குத் தலைவராகப் பொறுப்பேற்றிருப்பது மிக மிகப் பொருத்தமானதாகும்.

பட்டிமன்றங்களிலே நீங்கள் தலைமை ஏற்று நல்ல தீர்ப்புகள் பலவற்றை வழங்கியது குறித்து இங்கே எடுத்துச் சொன்னார்கள். பட்டிமன்றங்களிலே தலைவர் தீர்ப்பு வழங்குகிற நேரத்தில் அவையிலே உள்ளவர்களைப் பார்த்து உங்களுடைய தீர்ப்பு என்ன என்று அவர்களையெல்லாம் கேட்டு, அவர்கள் கையொலி மூலமாகவோ அல்லது கைகளைத் தூக்கி உயர்த்திக் காட்டுவதன் மூலமாகவோ அவர்களின் கருத்துக்களை அறிந்து அந்தக் கருத்துக்களுக்கு ஏற்ப தீர்ப்பு வழங்குவது பட்டிமன்றத்திலே ஒரு மரபு.

அதைப்போலவே இங்கே சில நேரங்களிலே தீர்ப்பு வழங்க வேண்டிய அவசியம் தங்களுக்கு ஏற்படும். சில நேரங்களில் தாங்களே எது சரி, எது தவறு என்று சீர்தூக்கிப் பார்த்துத் தீர்ப்பு வழங்கவேண்டிய நிலைமையும் தங்களுக்கு ஏற்படும். அப்படி ஏற்படும்போது எதிர்க்கட்சிகளின்

சார்பாகவும் நான் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். தவறு ஆளும் கட்சியின்பக்கம் இருந்தாலும், நீங்கள் கண்டிப்பாக நடந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக உண்டு. இப்படிச் சொல்வதன் காரணமாக எதிர்க்கட்சியிலே உள்ள அருமைத் தலைவர்களுக்கு எந்தவிதமான அச்சமும், தங்களுடைய தீர்ப்பைப் பற்றி இருக்கத் தேவையில்லை என்பதை நான் இங்கே ஆளும் கட்சியின் சார்பாக உறுதி அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவர் அவர்களே, தாங்கள் நடத்திய பத்திரிகை களுடைய பெயர்களை நான் பார்த்தேன். **"தென்மொழி, "அறிவு", "கைகாட்டி"** என்று மூன்று பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்திருக்கிறீர்கள். எனவே இந்த அவையிலே தென்மொழிதான் முழங்கும். தென் மொழிகளிலே முதல் மொழியாம் தமிழ் மொழிதான் முழங்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அறிவு என்ற ஏடு நடத்தியிருக்கிறீர்கள். உங்கள் தீர்ப்பெல்லாம் அறிவார்ந்த தீர்ப்பாக இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. கைகாட்டி என்ற பத்திரி கையை நடத்தியிருக்கிறீர்கள். இந்த அவையிலே கேள்வி நேரத்தில் கைதூக்குகின்றவர்கள் பக்கமெல்லாம் திரும்பிப் பார்த்து, அவர்களுக்கெல்லாம் நீங்கள் நல்ல வாய்ப்புகளை வழங்குவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. எனவே இந்த அவையினுடைய மாண்பைக் காப்பாற்றக் கூடிய தமிழ் மகனாக தமிழ்க்குடிமகனாகப் பொறுப்பேற்றிருக்கிற உங்களை என் சார்பிலேயும், இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் அனைவரின் சார்பிலேயும் வாழ்த்துகிறேன். பாராட்டுகிறேன்.

சட்டமன்றப்
பொன்விழாவில்



கலைஞருடன்
நூலாசிரியர்...